Registered as a NewsPaper
12 JUL 2004
விலை: ரூபா 7.00




# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்
பக்கங்கள் – 12
நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆனி–28 | 12–07–2004 | திங்கட்கிழமை | ஓசை –145

# கண்காணிப்புக் குழுத்தலைவர் ஹொவ்டே நேற்றுக் கிளிநொச்சிக்குத் திடீர் விஜயம்!

## தமிழ்ச்செல்வனுடனான சந்திப்புக்குறித்து தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை!

(கிளிநொச்சி)

**யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் டொன்புறூவ் ஹொவ்டே திடீர்விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்றுக் காலை கிளி.வந்தார். அவர் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனுடன் பேச்சுக்கள் நடத்தினார். ஆயினும் பேசப்பட்ட விடயங்கள் குறித்து விபரம் வெளியிடப்படவில்லை.**

நேற்றுக் காலை 10.30 முதல் 11.30 வரை மேற்படி சந்திப்பு கிளிநொச்சி விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் நடைபெற்றது. இச்சந்திப்பின் போது விடுதலைப்புலிகளின் தரப்பில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன், விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் நாயகம் புலித்தேவன,ஜோர்ஜ், மற்றும் கண்காணிப்புக் குழுத்தலைவரும், குழுவினரும் கலந்து கொண்டனர்.

முன்னதாக காலை 10.30 மணிக்கு உலங்குவானூர்தி மூலம் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் வந்திறங்கிய

(12ஆம் பக்கம் பார்க்க)

## வாழைச்சேனை ஈ.பி.டி.பி அலுவலகம் மீது இனந்தெரியாதோர் துப்பாக்கிச் சூடு

(கொழும்பு)

வாழைச்சேனை ஈ.பி.டி.பி அலுவலகத்தின் மீது நேற்று முன் தினம் இரவு இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இரவு 7.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தையடுத்து அலுவலகத்திலிருந்தும் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகவும், இரு தரப்பினருக்கும் இடையில் சிறிது நேரம் துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருப்பதாகவும் வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்திருக்கின்றார். இந்தச் சம்பவத்தை அடுத்து தேடுதல் நடத்தப்பட்டது என்றும் ஆனால் ஒருவரும் கைது செய்யப்படவில்லை என்றும் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்திருக்கின்றார். (32)

## ஆனையிறவுப் பகுதியில் வீதிவிபத்தில் ஒருவர் பலி!

ஆனையிறவுப் பகுதியில் நேற்றையதினம் இடம்பெற்ற வீதிவிபத்தின் போது யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் காயங்களுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வருகிறார்.நேற்றுப் பிற்பகல் 2.00மணியளவில் ஆனையிறவுப் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்திலேயே இவர் உயிரிழந்துள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)



படம்:சசி

## புலிகள்–அரசாங்கம் பேச்சுக்குறித்து எதிர்வுகூற இன்னும் காலமிருக்கிறது

### நோர்வே வெளிவிவகார அமைச்சர் பீற்றர்சன்

சிறிலங்கா அரசாங்கத்திற்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் குறித்து எதிர்வு கூறுவதற்கு இன்னும் காலமிருக்கின்றது என நோர்வேயின் வெளிநாட்டு அமைச்சர் ஜான் பீற்றர்சன் தெரிவித்துள்ளார்.

இந்துப் பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த இரண்டு வருடகாலமாகக் கடைப்பிடிக்கப்படும் போர் நிறுத்தம் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படும் என நம்பிக்கை வெளியிட்டார்.

" இரண்டு வருடபோர் நிறுத்தத்தால் அமைதியின் பலன்களை மக்கள் காணுகின்றார்கள். இது ஒரு சக்திமிக்க அனுபவம். கற்பனை செய்யக்கூட முடியாத சம்பவங்கள் நேரத்திற்கு நேரம்நடைபெறுகின்றன. மேலும் இத்தகைய சம்பவங்கள் நிகழாது என நான் நினைக்கிறேன்" என்றும் கூறியுள்ளார்.

மட்டக்களப்பில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகளின் அரசியற் போராளிகள் மீது இரு துப்பாக்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்ட நாளும் கொழும்பில் பொலிஸ் நிலையம் ஒன்றில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டதன் முதல் நாளுமான தினத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜே.என்.டிக்ஸிற் ஆகியோரைச் சந்தித்திருந்தார் ஜான் பீற்றர்சன்.

மேலும் " அமைதிப் பேச்சுக்களை மறுபடி தொடங்குவது எப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேத் தூதுவர் நாளை கிளிநொச்சிக்கு விஜயம்

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் கான்பிரஸ்கார் நாளை கிளிநொச்சிக்கு விஜயம் செய்யவுள்ளதாக பி.பி.ஸி தெரிவித்தது. போர் நிறுத்த நிலைமைகள் மற்றும் நடந்து முடிந்த மாகாணசபைத் தேர்தலைத் தொடர்ந்து சமாதான முயற்சிகள் தொடர்பான அடுத்தகட்ட நகர்வுகள் பற்றி இவர் புலிகளுடன் கலந்துரையாடவுள்ளதாகத் தெரியவருகிறது.

## அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பிரித்தானியாவுக்குப் பயணம்

சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பிரித்தானியாவுக்கான விஜயம் ஒன்றை மேற் கொண்டுள்ளார். அங்கு தங்கியிருக்கும் காலப்பகுதியில் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் ஜக்ஸ்ரோவைச் சந்தித்து உரையாடவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவரது விஜயம் குறித்து உத்தியோகபூர்வ தகவல்கள் வெளிவராத நிலையில் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகம் இவரைக் கௌரவிக்கவுள்ளதாகத் தெரிய வருகிறது. இதேவேளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தைக் கையேற்றபின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மேற்கொண்டுள்ள 5 ஆவது விஜயமாக அமைந்துள்ளது. சனாதிபதியினால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய விதிகளுக்கமைய அமைச்சரவையைச் சேர்ந்த எந்த ஒரு அமைச்சரும் வருடம் ஒன்றிற்கு 4 தடவைகளே வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (32)

## ஆறு மாகாண சபைகளிலும் ஐ.ம.சு.மு.ஆட்சியைப் பிடித்தது!

(கொழும்பு)

ஆறு மாகாண சபைகளுக்கான தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி பெற்றுள்ளது. நேற்று வெளியாகியுள்ள உத்தியோக பூர்வ முடிவுகளின்படி ஆறு மாகாணங்களின் ஆட்சியை அரசாங்கக் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தனித்து கைப்பற்றியுள்ளது.

ஊவா, சப்ரகமுவா, வடமத் திய, தென் மாகாண சபைகளின் நிர்வாகம் ஏற்கனவே பொதுசன ஐக்கிய முன்னணியின் கட்டுப்பாட்டிலேயே இருந்து தற்போது மீண்டும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கட்டுப்பாட்டுள் வந்துள்ளதுடன் ஏனைய இரண்டு மாகாணங்களின் ஆட்சியும் இத்தேர்தல் மூலம் கட்சியின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## தங்காலை சிறையிலிருந்து கைதிகள் தப்பி ஓட்டம்

(கொழும்பு)

தங்காலை சிறைச்சாலையில் இருந்து ஆறு கைதிகள் நேற்று அதிகாலை தப்பிச் சென்றுள்ளனர். இவர்களைக் கைது செய்வதற்காக மூன்று பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. இக்கைதிகள் வீரகெற்றிய காட்டுப் பகுதியில் மறைந்திருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## அமெரிக்க புலனாய்வு அதிகாரிகள் குடாநாட்டிற்கு இரகசியப் பயணம்

அமெரிக்க புலனாய்வு அதிகாரிகள் யாழ். குடாநாட்டுக்கு இரகசியப் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்கள். இந்தக் குழுவில் அமெரிக்க புலனாய்வுத்துறை அதிகாரிகள் ஐந்து பேர் உள்ளடங்குவதாக கூறப்படுகிறது. கடந்த வெள்ளியன்று பலாலி சிறிலங்காப் படை முகாமுக்கு சென்ற இவர்கள் சிறிலங்காப் படை புலனாய்வு அதிகாரிகள் பலரைச் சந்தித்து உரையாடியுள்ளார்கள் சமாதான சூழலில் படைத்துறை சமநிலையைப் பேணல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து அமெரிக்க அதிகாரிகள் விளக்கம் அளித்துள்ளார்கள். இந்தப் புலனாய்வு அதிகாரிகள் மட்டக்களப்பு, அம்பாறை, மன்னார், வவுனியா, திருகோணமலை ஆகிய பகுதிகளிலும் சிறிலங்கா புலனாய்வு அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்கள்.

## வரிவிளம்பரம்

### வேந்தன் பல்கட்டும் நிலையம்

சொந்தப் பற்களுக்கு நிகரான சங்குப்பற்களைக் கட்டுவதற்கும், சிறந்த முறையில் தயாரான சாதாரண பற்களைக் கட்டுவதற்கும், மிதப்புப் பற்களுக்கு சிறந்த முறையில் "கிளிப்" போடுவதற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம், வேந்தன் பல்கட்டும் நிலையம், மத்திய கல்லூரி மைதானம் முன்பாக ஏ-9 ·சாலை, ஆனந்தபுரம், கிளிநொச்சி.(சி- 9837)

### காணி விற்பனைக்குண்டு

மாங்குளம், துணுக்காய் வீதியில் வன்னிவிளாங்குளம், முத்துமாரி அம்மன் கோவிலுக்கு அண்மையில் 10ஏக்கர் காணி பெரிய கிணற்றுடன் நெற்செய்கைக்கு ஏற்ற குளத்து நீர்ப்பாசனக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- சி.சத்தியமூர்த்தி, சத்தியவாசா, ஆஸ்பத்திரி வீதி, சங்கானை. (4128)

### போட்டிப்பரீட்சைவகுப்பு

ஆசிரியர் தெரிவுப்போட்டிப் பரீட்சைக்கான பயிற்சிவகுப்புக்கள் வார நாட்களில் மாலை 5.00 - 6.00 வரையும், வார இறுதி நாட்களில் காலை9.00-12.00மணி வரையும் வவுனியா புகையிரத நிலையத்திற்குமுன்பாகஇயங்கும் கேம்பிறிஜ் கல்லூரியில்நடைபெறும். (4635)

### வாடகைக்கு

கிளிநொச்சி-கரடிபோக்கில் உள்ள இளையவி கட்டட தொகுப்பில் அலுவலகப்பாவனைக்கு/ வியாபார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தக் கூடிய ஒரு கடைக் கட்டடமும் இரு மேல்மாடி அறைகளும் வாடகைக்கு உண்டு நேரில் அல்லது TP.226/3818 (4789)

### தவறிவிட்டது

துரைராசா சதீஸ்குமார் ஆகிய எனது அடையாள அட்டையும், போக்குவரத்து அனுமதிஅட்டையும் மற்றும் சில ஆவணங்களும் வட்டக்கச்சிக்கும் ஜெயந்திநகருக்கும் இடையில் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனை கிளிநொச்சியில் அல்லது வீட்டுஇலக்கம்41இல் கொடுத்து உதவவும். (4639)


# ஒட்டுசுட்டானில் வீதி விபத்தில் சாரதி படுகாயம்; ட்றக்பலத்தசேதம்

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பகுதியில் நேற்றுக்காலை இடம் பெற்ற வீதி விபத்தொன்றில் வாகனச் சாரதி ஒருவர் பலத்த காயமடைந்தார். வாகனமொன்று பெரும் சேதமடைந்தது.நேற்றுக் காலை 10.30 மணியளவில் ஒட்டுசுட்டான் தான்தோன்றி சிவன் கோவிலுக்கு அருகாமையில் இவ்விபத்து இடம் பெற்றது.மாங்குளத்திலிருந்து முல்லைத்தீவு நோக்கி அதிவேகமாக வந்த ட்றக்வண்டி வீதியின் குறுக்கேயுள்ள சிறிய தடையைத் தாண்டிச் செல்கையில் தனது கட்டுபாட்டை மீறி அருகில் இருந்த உழவு இயந்திர பெட்டியுடன் மோதி உழவு இயந்திர பெட்டி



சிறு சேதத்திற்குள்ளானதுடன், ட்றக் பலத்த சேதத்துக்குள்ளானது.அதன் சாரதி பலத்த காயத்திற்கும் உள்ளானார். சாவகச்சேரியைச் சேர்ந்த பர மேஸ்வரன் ரஞ்சித்/இன்பன் (வயது 24) என்ற வாகனச் சாரதியே காய மடைந்தவராவார். (05)


### உடையார்கட்டு-சுதந்திரபுரம் ஸ்ரீமுத்துமாரியம்மன்ஆலயத்தினரின் அதிஸ்ட இலாபச் சீட்டு இழுப்பு முடிவுகள்

| | இல | | |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | 0111 | 03 | 0186 |
| 2ஆம் பரிசு | 0179 | 04 | 0778 |
| 3ஆம் பரிசு | 1363 | 05 | 0247 |
| ஆறுதல் பரிசுகள் | இல | 06 | 0404 |
| 01 | 2525 | 07 | 0232 |
| 02 | 0370 | 08 | 1649 |
| | | 09 | 1892 |
| | | 10 | 0735 |

தகவல்–ஸ்ரீ முத்துமாரியம்மன்ஆலய பரிபாலன சபையினர் (சி10013)

### பணிநிலை வேண்டுகை

01. வெல்டிங், டிங்கர் வேலை அனுபவம் உள்ளவர் தேவை.

02. வாகன பெயின்ட் வேலையில் அனுபவம் உள்ளவர் தேவை.

மேற்குறிப்பிட்ட தகைமையை உடையவர்கள் எதிர்வரும் (15.07.2004ற்கு) இடையில் சுடர் கோழி வளர்ப்பகம் 155ஆம் கட்டை விவேகானந்தநகர் எனும் முகவரிக்கு வருகை தந்து நிர்வாகியுடன் தொடர்பு கொள்ளவும்.

தகவல் (நிர்வாகி)

(4640)


# ஓய்வுபெற்ற வலயக்கல்விப்பணிப்பாளர் சரவணபவனுக்கு சேவைநலன்பாராட்டு

முல்லைத்தீவு வலயக்கல்விப்பணிமனையின் வலையக் கல்விப்பணிப்பாளரான ஓய்வு பெற்ற கந்தையா சரவணபவன் அவர்களுக்கு புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர்சங்கத்தால் நேற்று மாலை 3.30 மணிக்கு புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் அதிபர் பி.கே.சிவலிங்கம் அவர்களின் தலைமையில் சேவைநலன் பாராட்டு விழா நடைபெற்றது.

ஆரம்பநிகழ்வாக மங்கல விளக்கை புலிகளின்குரல் பொறுப்பாளர் ந.தமிழன்பன் அவர்களும், புதுக்குடியிருப்பு பிரதேசசெயலர் செ.தயானந்தாஅவர்களும் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து வரவேற்புரையினை பழைய மாணவர்சங்க செயலாளர் பார்த்தீபன் நிகழ்த்த கிராம சேவையாளர் வீ.கனகசுந்தரசுவாமி, புலிகளின் குரல் நிறுவனப்பொறுப்பாளர் தமிழன்பன் ஆகியோர் உரையாற்ற சிறப்புரையை விடுதலைப் புலிகளின் கல்விக்கழக பொறுப்பாளர் வெ.இளங்குமரன் ஆற்றினார்.

திரு.க.சரவணபவன் அவர்களின் சேவையைப் பாராட்டி ஆசிரியர் ஏகாம்பரம் அவர்களும் புதுக்குடியிருப்பு வேணாவில் முருகானந்தா வித்தியாலய அதிபர் இ.செல்வநாயகம் அவர்களும் கவிதை வாசித்தனர்.

இதனையடுத்து புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் செ.தயானந்தா அவர்களால் சரவணபவன் அவர்களுக்கு பொன்னாடைபோர்த்திக் கௌரவிக்கப்பட்டது.

இதனையடுத்து கல்விக்கழக பொறுப்பாளர் இளங்குமரன் அவர்களால் நினைவுப் பரிசு ஒன்று சரவணபவன் அவர்களுக்கு வழங்கிக்கௌரவிக்கப்பட்டது.

தொடர்ந்து ஏற்புரையினை க.சரவணபவன் அவர்கள் ஆற்றினார். (08)

## இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதிகளில் பரீட்சை நேரங்களில் மாற்றம்

(அலுவலக செய்தியாளர்)

பரீட்சார்த்திகளின் நன்மை கருதி இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் பரீட்சை நேரத்தில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இது குறித்து கிளி.வலயக் கல்விப்பணிப்பாளர் கருத்துத் தெரிவிக்கையில் இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதிகளில் பரீட்சைகள் நடக்கும் நேரங்களில், அதாவது அப்பகுதிகளில் காலை 9.00 மணிக்கு பரீட்சைகள் ஆரம்பமாகும் பட்சத்தில் இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதிகளில் குறிப்பாக கிளி,முல்லை,வவுனியா வடக்கு, மன்னார் பகுதிகளில் தாயக நேரப்படி காலை 8.30 மணிக்கே பரீட்சைகள் ஆரம்பமாகுமெனவும் இனிமேற் காலங்களில் இந்நேரத்தின் பிரகாரமே பரீட்சைகள் (5ஆம் ஆண்டு புலமைப்பரிசில், (க.பொ.த.சா-த) க.பொ.த. உயர்தரம்) ஆகியவை நடைபெறுமெனத் தெரிவித்துள்ளார். (சோ,கு)

## கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் சமகால அரசியல் கருத்தரங்கு

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் ஏற்பாட்டில் சமகால அரசியல் கருத்தரங்கு ஒன்று கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதில் யாழ். பல்கலைக்கழக வணிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.ஜி. இரட்ணம் சமகாலமும் சமூகமும் என்ற கருப்பொருளில் கருத்துரை வழங்கவுள்ளார். சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினர் தொடர்ச்சியாக பல்வேறு கருத்தரங்குகளை வழங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (36)

## நாய்களால் தொல்லை

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு நகரப்பகுதியில் கட்டாக்காலியாகத் திரியும் நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது. இதனால் வீதிவிபத்துக்களும் இடம் பெற்று வருகின்றன. அந்த வகையில் கடந்த வியாழனும் காலை புதுக்குடியிருப்பு முல்லை. வீதியில் பாற்பண்ணையடியில் மோட்டார் சைக்கிளில் வந்தவர் நாயுடன் மோதிக் கொண்டதால் மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானது. அதில் வந்தவர் காயமடைந்தார்.

எனவே இவ்வாறான விபத்துக்களை தவிர்த்துக் கொள்ள சம்பந்தப்பட்டவர்கள் இவ்விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் எனமக்கள்எதிர்பார்க்கின்றனர். (08)


## கண்ணீர் அஞ்சலி



அமரர்

### தேவதாசன் உதயகுமார்

கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் பணியாளர் தேவதாசன் உதயகுமார் அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

தொழில் நுட்பக் கல்வி நிறுவனச் சமூகம்
கிளிநொச்சி

(சி.10014)

## சாவு அறிவித்தல்



அமரர்

### தேவதாசன் உதயகுமார்

(யாழ் பல்கலைக்கழக வணிகப்பீட இறுதியாண்டு மாணவனும் கிளி/தொழில்நுட்பக் கல்லூரி உத்தியோகத்தரும்)

இல.1169 திருநகர் கிளிநொச்சியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.தேவதாசன் உதயகுமார் 11.07.2004 அன்று அகாலச்சாவடைந்துள்ளார்.இவர் மயிலு தேவதாசன் பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மகனும், உதயபாபு (லண்டன்), காலம்சென்ற உதயமோகன், ரஞ்சன், உதயதேவிகா (கொலண்ட்), அருள்விமலன், உதயசாந்தினி ,அனுயன் (மாணவன் கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி) ஆகியோரின் அன்புசகோதரனும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் 13.07.2004 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் திருநகர் இந்து மயானத்தில் இடம்பெறும்.இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

இல–1169
திருநகர், கிளிநொச்சி

தகவல்
குடும்பத்தினர்

(4641)

# ஆசியபசுபிக் பிராந்தியத்தின் முன்னேற்றத்திற்கு தடையாகவுள்ள எயிட்சுக்கெதிராக நடவடிக்கைதேவை

## பாங்கொக் மாநாட்டில் கொபி அனான்

**ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் பல தசாப்தகாலமாக ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றங்களைப் பாதிக்கும் எச்.ஐ.வி. நோய்க்கெதிராக இங்கு வாழும்மக்கள் தீவிர நடவடிக்கையினை மேற் கொள்ளவேண்டும எனவும்.ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் வாழும் 34 இலட்சம் மக்கள் இன் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அதனை விரைவில் தடுக்கவும் வேண்டுமெனவும் ஐக்கிய நாடுகள்சபை செயலாளர் நாயகம் கொபிஅனான் தெரிவித்துள்ளார்.**

பாங்கொக் இல் 34 ஆசிய பசுபிக் நாடுகள் இணைந்து நேற்று எயிட்ஸ் நோய் தடுப்புக் கூட்டமொன்றினை நடத்தியுள்ளன இந்நிகழ்வில் கலந்து கொண்ட ஐக்கியநாடுகள் செயலாளர் நாயகம்கொபி அனான் அங்கு உரைநிகழ்த்துகையிலேயே இவ்வாறு கூறினார்.

இதேவேளை எச்.ஐ.வி. சம்பந்தமான நடவடிக்கை மேற் கொள்ளும் ஐக்கிய நாடுகள் நிறுவனமான யு.என்.எயிட்ஸ் தகவல் தருகையில், ஆசியநாடுகளின் தலைவர்கள், அதிகரிக்கும் இந் நோயினை உடனடியாகத் தடுக்க வேண்டுமென்றும் இல்லையேல் நிலைமை மிக மோசமடையும் என்றும் தெரிவித்துள்ளது.

சீனா, இந்தோனேசியா வியட்னாம் ஆகிய நாடுகளில் அதிக எண்ணிக்கையான எயிட்ஸ் நோயாளிகள் இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

அமெரிக்க மத்திய உளவறியும் நிலையம் தகவல் தருகையில் ,இந்தியாவில் 2010 ஆம் ஆண்டளவில் இரண்டு கோடி மக்களுக்கு எயிட்ஸ்நோய் ஏற்பட்டிருக்கும் என்று தெரிவித்துள்ளது.

நேற்று நடைபெற்ற இக் கூட்டத்தின் இறுதியில் ஆசிய பசுபிக் பிராந்திய நாடுகளின் தலைவர்கள் முக்கிய பிரகடனம் ஒன்றிலும் கைச்சாத்திட்டுள்ளனர்.

# ஆப்கான் அரச படைகள் மீது தலிபான் தீவிரவாதிகள் தாக்கு

ஆப்கானிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகள் அரசபடைகள் மீது கொரில்லாத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். இதில் தலிபான் தீவிரவாதி ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாக அரச படை அதிகாரி கூறியுள்ளார்.

ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சி அகற்றப்பட்ட பின்னர் அங்கு அமெரிக்கப் படையினரின் மேற்பார்வையில் முகமது கச்சாய் தலைமையில் இடைக்கால அரசு செயற்பட்டு வருகின்றது.


இந்நிலையில் எதிர்வரும் அக்டோபர் மாதம் அங்கு சனாதிபதித் தேர்தல் நடத்தப்படவுள்ளது.

இந்தத் தேர்தலை நடத்த விடமாட்டோம் என்று சவால் விடுத்துள்ள தலிபான் தீவிரவாதிகள் ஆப்கானிஸ்தானின் அரச படைகள் மீதும் அமெரிக்கப்படையினர் மீதும் அடிக்கடி கொரில்லாத் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

ஆப்கானிஸ்தானின் அருகில் பாகிஸ்தானின் எல்லையோரத்தில் அமைந்துள்ள சிபின் வூல்டா எனுமிடத்தில் அரச சோதனைச் சாவடிகள் மீது நேற்று முன்தினம் 40 இற்கும் மேற்பட்ட தலிபான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

அரச படைகள் பதில் தாக்குதல் நடத்தியதில் தலிபான் தீவிரவாதி ஒருவர் கொல்லப்பட்டதாக அரசு அறிவித்துள்ளது.

தலிபான் தீவிரவாதிகளின் செயற் பாடுகள் அங்கு முடிவுக்கு கொண்டு வரப்பட்டதாகக் கூறப்பட்ட பின்னர் இத்தாக்குதல் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



ஆப்கானிஸ்தானின் 'ஹெராற்' றில் குண்டு வெடிப்புச் சம்பவம் நடந்ததையடுத்து அப்பிரதேசத்தில் கனரக ஆயுதத்துடன் கடமையில் ஈடுபட்டிருக்கும் ஆப்கான் படையினர்.

மேற்குப் பகுதிநகரான ஹெராற்றில் நேற்று நடந்த குண்டு வெடிப்பில் ஐந்து பொது மக்கள் கொல்லப் பட்டும் 34 பேர் காயமடைந்தும் இருந்தனர்.

# பெருவில் மூடுபனி காரணமாக இருபேருந்துக்கள் மோதிக்கொண்டன

## 37 பேர் உடல் நசுங்கி உயிரிழப்பு

பெருநாட்டில் மூடுபனி காரணமாக இரண்டு பேருந்துகள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் 37 பேர் உடல் நசுங்கி உயிரிழந்தனர். 20பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பெருநாட்டின் தலைநகர் லிமாவையடுத்த பால்பா எனுமிடத்தில் தான் பேருந்து விபத்து ஏற்பட்டுள்ளது.அடர்ந்த பனிமூட்டம் காரணமாகவே இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸார் கூறியுள்ளனர்.

பெருநாட்டில் மோசமான வீதிகள் மற்றும் வானிலை காரணமாக ஆண்டு தோறும் ஏற்படும் விபத்துக்களில் நூற்றுக்கணக்கானோர் பலியாகி வருவதாக புள்ளி விபரங்கள் கூறியுள்ளன.

பெருநாட்டில் தற்சமயம் பனிப்பொழிவு அதிகரித்துள்ளது. விபத்துக்களும் உயிரிழப்புக்களும் அதிகரித்து வருவதாகப் புள்ளிவிபரத்தில் கூறப்பட்டுள்ளது.

# டெல் அவிவ் நகரில் குண்டுத்தாக்கு ஒருவர் பலி; 21 பேர் படுகாயம்

## அல்-அக்ஷா உரிமை கோரியது

இஸ்ரேலின் டெல்அவிவ் நகரில் நேற்றுக்காலை இடம் பெற்ற குண்டுத்தாக்குதலில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 21 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இத்தாக்குதலுக்கு நாமே காரணமென பலஸ்தீனத்தின் அல்-அக்ஷா இயக்கத்தினர் உரிமை கோரியுள்ளனர். நான்கு மாதங்களின் பின் இஸ்ரேலிய நகர் ஒன்றில் இடம்பெற்ற முதலாவது குண்டுத்தாக்குதல் சம்பவம் இது என்பது குறிபிடத்தக்கது.

டெல்அவிவ் நகரில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்தபோதே இச்சம்பவம் இடம்பெற்றதாக இஸ்ரேலிய பொலிசார் தெரிவித்துள்ளனர். இதேவேளை இத்தாக்குதல் திட்டமிட்டு மேற்கொள் ளப்பட்டதெனவும், இது ஓர் தற்கொலைத் தாக்குதல் அல்ல எனவும் இஸ்ரேலிய பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். குண்டுத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற இடம் தற்போது பொலிசாரால் சீல் வைக்கப்பட்டு பொதுமக்களின் நடமாட்டததிற்கு தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பலஸ்தீன சனாதிபதி யசீர் அரபாத்திற்கு நெருங்கிய தொடர்புடைய அல்-அக்ஷா அமைபினர் தாமே இக்குண்டுத் தாக்குதலுக்குக் காரணமென உரிமை கோரியுள்ள அதேவேளை பலஸ்தீன பகுதிகளில் இஸ்ரேல் எமது தலைவர்களைக் குறி வைத்து நடத்திவருகின்ற தாக்குதலுக்கு பதிலடியாக இத்தாக்குதல் மேற்கொள் ளப்பட்டதென அவ்இயக்கம் மேலும் தெரிவித்துள்ளது. பலஸ்தீன எல்லைகளில் இஸ்ரேல் எவ்வாறான தடுப்பு வேலிகளை அடைத்தாலும் அதனை ஊடுருவி தாக்கும் திறன்தமக்கு உண்டு என்பதை நிருபிப்பதற்காக இத்தாக்குதல் நடத்தப்பட்டதென அவ் இயக்கம் சுட்டிக்காட்டியுள்ளது.



ஈராக்கின் றமடியில் குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்டவரின் சவப்பெட்டியை குடும்ப உறுப்பினாகள் சுமந்து செல்கின்றனர். சென்ற வெள்ளியன்று அமெரிக்கப் படையினர் இவர்களின் வீட்டின் மீது நடாத்திய ஷெல் தாக்குதலில் நால்வர் உயிரிழந்தனர்.

# ரஷ்ய குடியுரிமை பெற்ற அமெ.பத்திரிகையாளர் கொலை

ரஷ்யாவில் பத்திரிகை ஆசிரியர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். போல் கிளெப்னிகோவ் (வயது-41) என்ற இந்த ஆசிரியர் தென்கிழக்கு மொஸ்கோவில் உள்ள தனது அலுவலகத்தில் இருந்து வெளியே வந்த போது இனந்தெரியாத துப்பாக்கி தாரியால் சுடப்பட்டு ஆபத்தான நிலையில் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படும் போது வழியில் மரணமானார்.

"போர்ப்ஸ்" என்ற சஞ்சிகையின் ஆசிரியரான இவர், ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்தவர் என்றும் ரஷ்ய குடியுரிமை பெற்றவர் என்றும் கூறப்படுகின்றது.

# ஈராக்கின் மேற்குக்கரையோரப்பகுதியில் நான்கு அமெரிக்கக் கடற்படையினர் பலி

ஈராக்கின் மேற்குக் கரையோரப்பகுதியில் நேற்றுக்காலை நான்கு அமெரிக்கக்கடற்படையினர் கொல்லப்பட்டுள்ளார்களென்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தகவலை அமெரிக்க இராணுவமே வெளியிட்டுள்ளதுடன் இவர்களது விபரங்கள் இன்னமும் வெளியிடப்பட வில்லை என்றும் தெரிவித்துள்ளது.

இதேவேளை பிலிப்பைன்ஸ் பிரஜை ஒருவரைப் பணயக் கைதியாக வைத்துள்ள தீவிரவாதிகள் அவர் விடுதலை செய்யப் பட்டுள்ளார் என்ற வெளியாகியிருந்த தகவலை மறுத்துள்ளனர்.

தீவிரவாதிகள் மீண்டும் விடுத்த எச்சரிக்கையில் ஈராக்கில் இருந்து 24 மணி நேரத்தினுள் பிலிப்பைன்ஸ் இராணுவம் வெளியேறுவதற்கான அறிகுறிகள் தென்படாது விட்டால் பிலிப்பைன்ஸ் பணயக்கைதியைக் கொன்று விடப்போவதாக தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ஈராக்கில் தீவிரவாதிகளால் பணயக் கைதிகளாக பிடித்து வைக்கப்பட்டிருக்கும் பல்கேரியாவைச் சேர்ந்த இரண்டு ரக்வண்டி சாரதிகளுக்கும் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் இது தொடர்பாக பல்கேரிய அரசாங்கம் விடுத்த அறிக்கையில் இவர்கள் இருவரும் இன்னமும் உயிருடன் இருப்பதாகவேதாம்நம்பியுள்ளதாக அறிவித்துள்ளது. இவர்களை விடுதலை செய்யவென பல்கேரிய இராஜதந்திரிகளை ஈராக்கிற்கு செல்லுமாறு அமெரிக்க சனாதிபதி புஷ் கேட்டுள்ளதற்கு இணங்க பல்கேரிய இராஜ தந்திரிகள் பக்தாத்திற்குத் சென்றுள்ளனர். இதனைப்புஷ் வரவேற்றுள்ளார்.

# பங்களாதேஷில் கடும் மழையால் 20 இலட்சம் பேர் வீடிழப்பு

## 11 பேர் பலி

(டாக்கா)

பங்களாதேஷில் கடும் மழையாலும் வெள்ளப் பெருக்காலும் குறைந்தது பதினொரு பேர் வரை உயிரிழந்ததாகவும் இரண்டு மில்லியன் மக்கள் வீடிழந்துதனித்து விடப்பட்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தெற்கு சிற்றகொங் பிரதேசத்திலேயே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

பல குடும்பங்கள் படகுகளிலும் நெடுஞ்சாலைகளிலும் பாடசாலைகள் மற்றும் அரசாங்கக் கட்டடங்களில் தஞ்சம் புகுந்துள்ளன.

உணவு மற்றும் குடிநீர் பற்றாக்குறையினை இம் மக்கள் எதிர்நோக்கி வருவதாகவும் உதவி வழங்குநர்கள் இம் மக்களைச் சென்றடைய முடியாதுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

வட கிழக்கு சில்ஹெற் வடக்கு நில்பாமறி மாவட்டங்களும் வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப் பட்டுள்ளதாகவும்.

ஜமுனா, பிரமபுத்திரா, மேக்னா, பத்மா உட்பட பல நதிகள் அபாய மட்டங்களுக்கு மேல் நீர் பாய்ந்து வருவதாகவும் இவற்றில் சில கரையை உடைத்துப் பாய்வதாகவும் பங்களாதேஷ் அதிகாரிகளும் சம்பவங்களை நேரில் பார்த்த சாட்சிகளும் கூறுகின்றனர்.

# அரும் பொருட்களைப் பாதுகாக்க பிரதேச ரீதியில் குழு அமைப்பு

(அலுவலக செய்தியாளர்)

**தமிழர் தாயகத்தின் பண்டைக்கால தொல்லியல் வரலாற்று ஆவணங்களையும், தமிழீழ போரியல் வரலாற்று எச்சங்களையும் பேணிப் பாதுகாக்கும் பொருட்டு அரும்பொருள்காப்பு நடுவகத்தினால் மாவட்டங்கள் தோறும் பிரதேச ரீதியாக அரும் பொருள்காப்புக்குழு உருவாக்கம் பெற்று செயற்படுத்தப்பட்டு வருகின்றன.**

கடந்த 9ஆம் திகதி பூநகரிப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ராஜன் தலைமையில் பூநகரிப் பிரதேசத்திற்கான அரும்பொருள் காப்புக் குழு தெரிவுசெய்யப்பட்டு அதன் பணிகளை உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

பூநகரிப் பிரதேச செயலக மண்டபத்தில் அன்றைய தினம் மு.ப 10.20 மணியளவில் அகவணக்கத்துடன் ஆரம்பமானது. தமிழீழ அரும்பொருள் காப்பு நடுவப்பணியகப் பொறுப்பாளர் சி.ஆதித்தவர்மன், தமிழீழ அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் செல்வி. தமிழினி, தொல்லியல் தேடலாளர் குணரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினார்கள். இந்நிகழ்வில் தொல்லியல் ஆர்வலர் தம்பு சின்னத்தம்பி கிளி/மாவட்டத் தமிழீழ நிர்வாக சேவை நிர்வாக அலுவலர் ராம்கி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இக்காப்புக்குழு உத்தியோக பூர்வமாக அரும்பொருள் காப்பு தொடர்பான பணிகளை மேற்கொள்ளும் என்பதனை பிரதேச வாழ் மக்களிற்கு பூநகரிப் பிரதேச அரும்பொருள் காப்புக் குழுச் செயலாளர் கோ.அரியநாயகம் தெரிவித்துள்ளார். (சோ,கு)



கிளிநொச்சி மக்கள் வங்கிக்கிளையின் 43ஆவது ஆண்டு நிறைவுவிழா மக்கள் வங்கிக் கட்டடத்தில் வெள்ளிக்கிழமை காலை நடைபெற்றது. இவ்வருடம் மக்கள் வங்கிக்கிளையிலிருந்து பரிசில்பெற்ற 7 வாடிக்கையாளருக்குத் தங்கப்பதக்கம் வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (சோ,கு)

## முச்சக்கரவண்டி தடம்புரண்டது

(அலுவலக செய்தியாளர்)

வட்டக்கச்சிப் பகுதியில் முச்சக்கரவண்டி ஒன்று பிரதான நீர்ப்பாசன வாய்க்காலுக்குள் தடம் புரண்டது.

நேற்று முன்தினம் இரவு 7.00மணியளவில் பிரதான வீதியில் வெளிநாட்டிலிருந்து வருகை தந்தவர்களுடன் பயணித்த முச்சக்கரவண்டி வீதியில் பாலத்தின் மதகு உடைந்திருந்ததனால் வீதியை விட்டு விலகி வாய்க்காலுக்குள் தடம் புரண்டது. இதில் பயணித்தவர்கள் காயங்கள் எதுவுமின்றித் தப்பித்துக்கொண்டனர். (கு)

## சான்றிதழ் வழங்கல்

முரசுமோட்டையில் வடக்கு கிழக்கு கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் கண்டாவளைப் பிரதேச செயலர் பணிமனை ஊடாக நடத்தப்பட்ட டிப்ளோமா தையல் பயிற்சி நெறியில் 2003ஆம் ஆண்டில் பயிற்சியை முடித்து சித்தி எய்திய 18 மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கல் கடந்த 7ஆம் திகதி நடைபெற்றது.(14)

## காலாவதியான உணவுப் பொருட்களையிட்டு நுகர்வோரிடம் மிகுந்த அவதானம் தேவை!

### - விலைக்கட்டுப்பாட்டுப் பகுதி அறிவுறுத்து

தமிழீழ நிதித்துறையின் விலைக்கட்டுப்பாட்டுப் பகுதியினர், கடந்த வெள்ளிக்கிழமை மல்லாவி,



துணுக்காய் பகுதிகளில் திடீர்ச் சோதனையின் போது வாணிப நிலையங்களில் காலாவதியான உரூபா முப்பத்தையாயிரம் பெறுமதியான பொருட்களை அழித்தனர். தேயிலை, பிஸ்கட் வகைகள், ஜாம் போத்தல்கள், பால்மாவகைகள், இனிப்பு வகைகள், கனியுப்புக் கலந்த நீர், மிக்சர், பப்படம, வனிலா, கேக் வகைகள், இலுப்பெண்ணெய்ப போத்தல்கள், நெய், டிப்பிரிப் மற்றும் உணவு வகைகள் உட்படப் பல பொருட்கள் வாணிபர்களின் அனுமதியுடன் அழிக்கப்பட்டன.

எனவே நுகர்வோர் பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது விழிப்பாக இருப்பதோடு இது தொடர்பான தகவல்களைத் தருமாறு விலைக்கட்டுப்பாட்டுப் பகுதியினர் வேண்டுகின்றனர்.

## கண்டெடுப்பு

(அலுவலக செய்தியாளர்)

தருமபுரத்தைச் சேர்ந்த கலைச்செல்வன் நிசாந்தன் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.840563324V) மற்றும் கொமேசல வங்கி கிரடிட்காட் உடன் பேஸ் ஒன்று தருமபுரத்தில் கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் விளம்பரப்பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.உரித்துடையவர்கள் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும். (சோ,கு)

# தலைவரின் தீர்க்கதரிசன சிந்தனைக்கமைய தேசத்தின் சிற்பிகளாக மிளிரவேண்டும்!

### - காந்தரூபன் நினைவுநிகழ்வில் பா.நடேசன்

(அலுவலக செய்தியாளர்)

எமது தேசியத்தலைவரும், எமது தேசமும், மக்களும் எதிர்பார்க்கின்ற எதிர்கால சிற்பிகள் தற்போது உருவாக ஆரம்பித்து விட்டார்கள் என்று நேற்றுமுன்தினம் செஞ்சோலையில் இடம்பெற்ற காந்தரூபனின் 14ஆம் ஆண்டு நினைவுதின விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் குறிப்பிட்டார்.

இன்றைய நாளானது எமக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தருகின்ற நாளாகும். உண்மையில் ஒரு போராட்ட சூழலில் எமது பிள்ளைகளின் எதிர்காலம் எப்படி இருக்க வேண்டும். எமது தேசம் எதிர்காலத்தில் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை அடிப்படையாக வைத்து எமது மதிப்புக்குரிய தேசியத் தலைவர் அவர்களின் ஒரு நீண்ட காலத் திட்டத்தின் அடிப்படையிலேயே இந்தச் செஞ்சோலை, காந்தரூபன் அறிவுச்சோலை போன்றன உருவாக்கப்பட்டன.

இங்கே பெரிய பொருளாதாரத் தடைகள், பெரிய இராணுவநடவடிக்கைகள் வரலாற்று ரீதியாக உலகமே பார்த்துக்கொண்டிருந்த பெரும் பெரும் இடப்பெயர்வுகள் இவ்வாறான ஒரு தேசிய நெருக்கடிக்குள் ஒரு போராட்ட சூழலில் எமது மக்களின் எதிர்காலம் எமது தேசத்தின் எதிர்காலம் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதை எதிர்காலத் திட்டமாக வரைந்து தலைவர் அவர்கள் இந்த அமைப்பை உருவாக்கி, இன்றைக்கு 13 வருடங்கள் வெற்றிநடைபோட்டு வளர்ச்சியடைந்து வருகின்றது என்றால் எமது போராட்டம் உண்மையில் சரியான பாதையில், சரியான தீர்க்கதரிசனத்துடன் சரியான ஒரு வழிகாட்டலில் சரியான ஒரு தலைவரின் தலைமைத்துவத்தின் கீழ் செல்கின்றது என்பது தான் அதன் அர்த்தம்.


எமதுபோராட்டத்தைப் பொறுத்த மட்டில் எமது இனத்தையே அழித்தொழிப்பதற்காக எமது இளம் சந்ததியினரை அழித்தொழிப்பதற்கான ஒரு பெரிய திட்டத்தை சிறிலங்கா அரசுகள் போராட்டம் ஆரம்பிப்பதற்கு முன்பு தொட்டு இன்று வரை நடாத்தி வருகின்றன.

இன்றைக்குக்கூட நீங்கள் இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் சென்று பார்த்தால் தெரியும். எமது தாயகப் பகுதிகளில் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இருக்கும் பிரதேசங்களில் இளம் சந்ததியினரை எவ்வாறு அழித்தொழிக்கலாம். இளம் சந்ததியினருடைய எதிர்காலத்தை சீரழித்தும், எமது தேசத்தை, எமது தேசியத்தை, எமது மக்களை எவ்வாறு இல்லாது ஒழிக்கலாம் என்பதற்காக பல்வேறு திட்டங்களைச் சிங்கள இராணுவம் தனது இராணுவ புலனாய்வினர் ஊடாகச் செயற்படுத்திவருகின்றது.

யாழ்ப்பாணத்தில் எமது இளம் சந்ததியினரைச் சீரழிப்பதற்காக பல்வேறு சமூக சீரழிவுகளை, சீரழிவுகளைத் தூண்டக்கூடிய பல திட்டங்கள் இன்றைக்கு நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அதேபோல் வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை போன்ற சிறிலங்கா இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள எமது பகுதிகளில் இளம் சந்ததியினரை எவ்வாறு அழித்தொழிக்கலாம் என்பதிலும் அவர்களுடைய எதிர்கால ஒளிமயமான வாழ்வினை அழிக்கலாம் என்பதை சிறிலங்கா அரசும், பல சர்வதேச அமைப்புக்களுடைய, சர்வதேச நிறுவனங்களுடைய உதவியோடு செயற்படுத்திக் கொண்டிருப்பதை எங்களால் காணமுடிகிறது.

தலைவர் அவர்கள் ஒரு பெரிய போராட்ட சூழலில் இந்தப் பிள்ளைகளுடைய எதிர்காலம், பிள்ளைகளினுடைய நலன், பிள்ளைகள் எவ்வாறு இருக்கவேண்டும் அவர்கள் எல்லாவிதமான துறைகளிலும் நிபுணர்களாக வரவேண்டும் என்பதில் மிகவும் அக்கறையாக, கரிசனையாக இருக்கிறார் என்பதை தான் நேரடியாகக் கண்ணூடாகக் கண்டிருக்கிறேன்.

அதுமாத்திரமன்றி இந்த தேசத்தின் மக்கள் வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து இருக்கின்ற எமது மக்களும் உங்களுடைய எதிர்காலத்தைப்பற்றி மிகவும் கரிசனையாகச் சிந்தித்து உங்களுடைய எதிர்காலம் நல்ல ஒளிமயமாக இருக்கவேண்டும். நீங்கள் ஒவ்வொருவரும் இந்தத் தேசத்தில் மிகவும் பெறுமதியான பிரயோசனமான பிரஜைகளாக வரவேண்டும் என்பதில் மிகவும் அவாவாக, ஆவலாக இருந்து செயற்பட்டு வருகின்றார்கள் என்பதை பிள்ளைகளாகிய நீங்கள் மனதில் கொள்ளவேண்டும்.



நீங்கள் ஒவ்வொரு துறை சார் நிபுணர்களாக எதிர்காலத்தில் வளரவேண்டும் அப்போது தான் எமது தேசம் விடுதலை அடையும் போது இந்தப் போராட்ட சூழலில் வளர்க்கப்பட்ட நீங்கள் இந்தத் தேசத்தைப் பலவழிகளிலும், பல துறைகளிலும் தலைமைதாங்கி ஆரோக்கியமான சமூக கட்டமைப்புகளை உருவாக்குவதற்கு நீங்கள் பெரிய தூண்களாக இருக்கவேண்டும் என்பதை நாங்களும் எதிர்பார்க்கின்றோம். எமது தேசமும் உங்களிடம் இருந்து எதிர்பார்க்கின்றது.

உங்களிடம் நிறைந்த பலம் உள்ளது, ஆர்வம் உள்ளது, அறிவுள்ளது. அதனைப் பயன் படுத்தி நீங்கள் நல்லதொரு நிலைக்கு வருவீர்கள். அதன் மூலம் எமது தலைவரும், மக்களும் எதிர்பார்த்த ஒரு எதிர் காலத்தின் சிற்பிகள் உருவாகத் தொடங்கி விட்டார்கள் என்பதை இந்த தேசத்திற்கு மட்டுமல்ல உலக நாடுகளுக்கே உங்கள் மூலமாக வெளிப்படுத்த முடிகிறது.

எனவே இவ்வளவு செயற்பாடுகளையும், வெற்றிகளையும் செய்ய உங்களுக்கு எல்லாவிதமான ஒத்துழைப்புக்களையும், வசதிகளையும் எமது தலைவர் ஏற்படுத்தியுள்ளார். அதன்மூலம் நீங்கள் வெற்றிநடைபோட்டு வளர்சியடைய வேண்டும் என்று கூறி எனது வாழ்த்துக்களையும், ஆசிகளையும் உங்களுக்குக் கூறவிரும்புகின்றேன். என்று அவர் தனது சிறப்புரையில் எடுத்துக் கூறினார். (கு)

# சாவகச்சேரி நகரசபையின் அசமந்தப் போக்கினால் சுகாதாரசீர்கேடுகளை எதிர்நோக்கும் வர்த்தகர்

**சாவகச்சேரி நகரின் தூய்மையைப் பேணவேண்டிய நகர சபை தொடர்ந்தும் அசமந்தப்போக்கை வெளிப்படுத்திவருகிறது. இதனால் இப்பகுதியில் சுகாதாரசீர்கேடுகள் மலிந்து வருவதாகத் தெரியவருகிறது.**

மரக்கறிச் சந்தையின் உள்ளே அமைந்துள்ள குடிநீர்க் குழாயில் இருந்து வரும் நீர் துர்நாற்றம் வீசுவதால் நூற்றுக்கணக்கான வர்த்தகர்கள் சந்தை வியாபாரிகள் இந்த நீரைப் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளனர். இதற்கு அருகில் கழிவுப்பொருட்கள் கொட்டப்பட்டதால் இந்த நீர் மாசுபட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

பழைய மரக்கறிச் சந்தை இப்பொழுது புதிய கழிவறையாக காட்சியளிக்கிறது. புதரும் செடிகளும் நிறைந்து காட்சியளிப்பதால் இப்பகுதி கழிப்பிடமாகவும் பாம்பு பெருகிக் குடியிருக்கும் பகுதியாகவும் மாறிவிட்டது. இதற்கு அருகில் அமைந்துள்ள புடவைக்கடைகளில் பாம்புகள் உள்ளேசென்று குடியிருப்பதும்செட்டைகளைக் கடைக்குள்ளே கழற்றிவிடுவதும் நிகழ்ந்து வருகின்றன. இப்பகுதியை நகர சபை இதுவரை கவனத்தில் எடுக்காததால் நவீன சந்தையின் பின் தொகுதி வர்த்தகர்கள் பெரும் பாதிப்புக்களைச் சந்தித்து வருகிறார்கள்.

இச்சந்தையிலுள்ள நல்ல தண்ணீர்க்கிணறும் இன்று பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. கிணற்றுக்குள் குப்பை கூழங்கள் நிறைந்தும், கிணற்றின் சுவர்களில் மரம் செடிகள் வளர்ந்தும் புனரமைக்கப்படாமல் உள்ளது. பழைய மரக்கறிச்சந்தைத் தொகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இருபத்து எட்டுக்கடைகள் இன்று மாடுகள் ஆடுகள் படுக்கும் இடமாக மாறிவிட்டது. வழிப்போக்கர்களும் குடிகாரர்களும் தங்கும் மடமாக மாறிவிட்டது. இப்பகுதியைச் சீர்செய்து புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இருபத்து எட்டுக்கடைகளும், இயங்க வைப்பதற்கு நகரசபை நிர்வாகம் இதுவரை உருப்படியான நடவடிக்கையை எடுக்கவில்லை. எனத் தெரிய வருகிறது. அதேபோல் இப்பகுதி இளைஞர்களின் விளையாட்டு மைதானம் நகரத்தை அண்டிய சந்தைக்குப் பின்பகுதியில் அமைந்துள்ளது. கடந்த ஒன்றரை மாதத்திற்கு முன்னர் இந்த மைதானம் படைத்தரப்பால் பாவனைக்கு வழங்கப்பட்டும் இதுவரை நகரசபை இதைப்புனரமைக்கவில்லை. அதுபோல் நவீன சந்தை முன்கடைத்தொகுதிக்கு 350ரூபாய் வீதமும் பின்கடைத் தொகுதிக்கு 200ரூபாய் வீதமும் வாடகைக்கு பெற்றுவந்த நகரசபை திடீரென்று அடுத்தமாதம் 1ஆம் திகதி முதல் முன்கடைத் தொகுதிக்கு 1500ரூபா வீதமும் பின் கடைத்தொகுதிக்கு 750 ரூபா வீதமும் வாடகை வழங்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளது.

இந்தத் திடீர் உத்தரவு வர்த்தகர்கள் இடையே குழப்பத்தை ஏற்படுத்தி இருக்கிறது. திடீர் என்று சுமார் நான்குமடங்கு வாடகையை கூட்டியுள்ள நகரசபை நிர்வாகத்திடம் கலந்து ஆலோசிக்க வர்த்தக சங்கம் முடிவெடுத்துள்ளது. (28)

# நெருக்கடிகளை சந்தித்து வரும் மகப்பேற்று மருத்துவமனைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபைஎல்லைக் குட்பட்ட பிரதேசங்களில் உள்ள மகப்பேற்று மருத்துவமனைகளில் வைத்தியர், தாதியர்கள் உட்பட பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படாது உள்ளன.மக்கள் செறிந்து வாழும் மேற்படி பிரதேசத்தில் உள்ள மகப் பேற்று மருத்துவமனைகளில் நிலவும் இவ்வாறான வெற்றிடங்கள் காரணமாக கற்பிணித்தாய்மார்களும்,குழந்தைகளும் பல்வேறு நெருக்கடிகளையும் சந்தித்து வருகின்றனர். இதனால் மக்களுக்கேற்பட்டுள்ள பாதிப்புக்களைக் கவனத்தில் கொண்டு உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (33)



கொடிகாமம் பிரதேசசபை புதிய விழா மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற பௌர்ணமி தின விழாவில் கொடிகாமம் பிரதேச அரசியல்துறை பொறுப்பாளர் திரு.ரத்தினம் அவர்கள் உரையாற்றுவதையும் மேடையில் பிரதேச சபை செயலாளர் திரு பாலச்சந்தர் மற்றும் ஓய்வு பெற்ற திருநாவுக்கரசு பாடசாலை அதிபர், திருநாவுக்கரசு மற்றும் சிறப்பு விருந்தினர்கள் அமர்ந்திருப்பதை படத்தில் காணலாம். (28)

# புதுக்குடியிருப்பு கைவேலியில் ஆரம்ப சுகாதார நிலையம் திறப்பு

(புதுக்குடியிருப்பு)

யுனிசெவ் நிறுவனத்தின் நிதி உதவியுடன் புதுக்குடியிருப்பு கைவேலிப் பகுதியில் அமைக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத் திறப்புவிழா கடந்தவெள்ளி காலை 10.30 மணிக்கு கைவே லிப்பகுதி தேசிய எழுச்சிப்பேரவை யின் ஆலோசகர் சிவா தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் தேசியக்கொடியை கைவேலி வலயப்பொறுப்பாளர் உமைநேசன் ஏற்றுவைத்தார். தொடர்ந்து பெயர்ப்பலகையை புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் செ.தயானந்தா திரை நீக்கம் செய்து வைக்க ஆரம்ப சுகாதார நிலையத்தை முல்லைத்தீவு பிரதி மாகாணசுகாதாரசேவைகள் பணிப்பாளர் டாக்டர் து.வி.ஜெயகுலராசா சம்பிரதாய பூர்வமாக நாடாவை வெட்டித்திறந்து வைத்தார். தொடர்ந்து ஆய்வு கூட அறையை யுனிசெவ் நிறுவனத்தின் கிளி-முல்லை உதவி திட்ட அலுவலர் கிறோக்கோ அவர்கள் நாடாவை வெட்டித்திறந்து வைத்தார்.

மரநடுகையை அடுத்து புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் செ. தயானந்தா, முல்லைத்தீவு பிரதி மாகாணசுகாதாரசேவைகள் பணிப்பாளர் டாக்டர் து.வி.ஜெயகுலராசா ஆகியோர் உரையாற்றினர். (08)



டாக்டர் ஜெயகுலராஜா



கிறோகிகோ

# மதுபோதையில் வரும் இளைஞர் குழு தென்மராட்சி வீதிகளில் அடாவடி

## பொதுமக்கள் முறைப்பாடு

(தென்மராட்சி)

தென்மராட்சியிலுள்ள சாவகச்சேரி,சங்கத்தானை மற்றும்கைதடி, நாவற்குழி ஆகிய பிரதேசங்களில் இளைஞர் குழுக்களின் அடாவடித்தனங்கள் அதிகரித்து வருகிறது.

மதுவினை அருந்திவிட்டுவந்து வீதிகளில் திரியும் இளைஞர் குழுக்களினாலேயே இத்தகைய அடாவடித்தனங்கள் மேற்கொள்ளப்படுவதாகவும், இதனால் வீதிகளில் நடமாட யுவதிகள் அஞ்சுவதாகவும் இப்பகுதி பொதுமக்கள் பலதரப்பினரிடமும் முறைப்பாடு செய்துள்ளனர்.

அத்துடன் இளைஞர் குழுக்களின் அடாவடித்தனங்களைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(33)

# நடுவப் பணிமனை திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் நடுவப் பணிமனை ஒன்றைத் திறந்து வைக்கவுள்ளது.

காங்கேசன் துறை வீதி யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள மேற்படி பணிமனை நாளை மறுதினம் காலை 10மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

மேற்படி திறப்பு விழாவில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுள்ளது. (28)

# வெடிகுண்டு கண்டுபிடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்திற்கருகில் அமைந்துள்ள இராணுவக் காவலரண் பகுதிக்கருகே கைவிடப்பட்டிருந்த வெடிகுண்டொன்று நேற்று முன்தினம்பிற்பகல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குறித்த காவலரணிலிருந்து படையினர் வெளியேறியுள்ள நிலையில் பொதுமக்களால் இக்குண்டு கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கண்ணிவெடியகற்றல் பிரிவிற்கு வழங்கப்பட்ட தகவலொன்றையடுத்து அக்குண்டு அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளது.

இதேவேளை கல்வியங்காட்டு சந்திப் பகுதியில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த வேளை அப்பகுதியிலுள்ள வைரவர் ஆலயத்தின் பின்பகுதியில் புதையுண்டிருந்த மிதிவெடிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக பொதுமக்களால் "ஹலோ டிரஸ்ற்" தொண்டமைப்பினரிற்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து அம்மிதிவெடிகளும் அகற்றப்பட்டுள்ளன. (27)

# கோணாவளைக் குறிச்சி கிராமத்திற்கு பாதை அமைக்க நடவடிக்கை

சரசாலை வடக்கு கோணாவளை குறிச்சியில் கடந்த இருபது வருடங்களாகப் பாதையின்றி வாழ்ந்து வரும் மக்களின் நீண்ட நாள் குறை அண்மையில் நடைபெற்ற சந்திப்பின் மூலம் நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இப்பகுதிக்கு பாதை அமைப்பதற்கான உறுதியான நடவடிக்கைகள் எடுப்பது என இச்சந்திப்பில் முடிவு செய்யப்பட்டது.

சாவகச்சேரி நகரசபைத்தலைவர் சரவணபவா மற்றும் சாவகச்சேரி பிரதேச செயலாளர் ஸ்ரீனிவாசன், பிரதேச சபை செயலாளர் பாலச்சந்தர், கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் சபாநாயகம், இப்பிரிவுக்கான கிராம உத்தியோகத்தர், உபேந்திரன் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் சமுர்த்தி அலுவலர் வணிகர் மன்றத்தலைவர் அருளானந்தம் மற்றும் கோணாவளை குறிச்சி கிராம பொது மக்களிடையே நடைபெற்ற கலந்துரையாடலில் இப்பகுதியில் உள்ள சில தனியார் வயல் நிலங்கள் ஊடாக பாதை அமைக்க முடிவு செய்யப்பட்டது. இதற்காக வயல் சொந்தக்காரர்களிடம் இருந்து நன்கொடையாகவும் நஷ்டஈடு கோரும் பட்சத்தில் அதற்கான பணத்தை இப்பகுதியில் குடியிருக்கும் மக்களிடம் இருந்து பெற்று வழங்குவதெனவும் முடிவு எடுக்கப்பட்டது. பாதை அமைப்பதற்கான பணிகளைத் துரிதகதியில் மேற்கொள்ள பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது. (28)

# மிருசுவில் பொது நூலகம் மீண்டும் செயற்படஆரம்பிக்கிறது

(தென்மராட்சி)

மிருசுவிலில் இயங்கிவந்த பொதுநூலகம் மீண்டும் தன் செயற்பாட்டை தொடங்கஇருக்கிறது 2000 ஆம் ஆண்டில் ஏற்பட்டபாரிய இடப்பெயர்வால் தன் அழகை இழந்து படைத்தரப்பாலும் பின்னர் ஏ.9 நெடுஞ்சாலை அலுவலகமாகவும் இயங்கி வந்த இந்த நூலகக் கட்டடத்தில், மீண்டும் வரும் புதன்கிழமையில் இருந்து நூலகம் இயங்க இருக்கிறது. இப்பகுதி பொதுமக்கள் மற்றும் நூலக அபிவிருத்திசபையினரின் முயற்சியால் மீண்டும் நூலகம் இயக்கம் பெற்றுள்ளது.

இதன்முறைப்படியான தொடக்க விழாவுடன் உள்ளூராட்சி வாரவிழாவும் நூலக வாரமும் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் மாணவர்களுக்கிடையேயான பேச்சுப்போட்டியும் கலைநிகழ்ச்சியும், பொது அறிவுப் போட்டி வினாடிவினாப்போட்டிகள் நடைபெறவுள்ளது. மிருசுவில் நூலக அபிவிருத்திசபைத்தலைவர் எஸ்.பி. அன்ரனிப்பிள்ளை தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (28)

# சு.க.சனாதிபதி வேட்பாளராக மகிந்த ராஜபக்ஷ நியமிக்கப்படுவாரா?



சனாதிபதி சந்திரிகா தான் இன்னும் 2 அல்லது இரண்டரை வருடகாலம் பதவியில் இருக்கலாம் என அண்மையில் கூறியிருக்கின்றார். ஆனால் சட்ட நிபுணர்கள் அவர் இன்னும் ஒரு வருடம் மட்டுமே ஆட்சியில் இருக்கலாம் எனக் கூறுகின்றனர்.

எவ்வாறாயினும் அவர் மீண்டும் சனாதிபதியாகத் தேர்தலுக்கு முகம் கொடுக்க முடியாது அவ்வாறெனில் அடுத்த சனாதிபதி வேட்பாளர் யாராக இருக்கும்?

ஜே.ஆர்.ஜயவர்த்தனா தனது பதவிக் காலம் முடியும் வரை அடுத்த சனாதிபதி வேட்பாளர் யார் என்பதை வெளியிடவில்லை. ஆனால் நாட்டு மக்களும் ஐ.தே. கட்சியும் பிரேமதாச அடுத்த சனாதிபதியாகப் போட்டியிடுவார் என நினைத்திருந்தனர்.

இறுதியில் பிரேமதாசாவை சனாதிபதி வேட்பாளராக ஜே.ஆர் அறிவித்தார். அவர் அறிவிக்கவில்லை அறிவிக்க நிர்ப்பந்திக்கப்பட்டார் என்றே கூறலாம்.

தனது உறவினர்களின் கட்சி எனக் கூறினாலும் கட்சியிலிருந்து தமக்குக் கிடைக்க வேண்டியதை பிரேமதாசா வலிய போரிட்டே பெற்றுக்கொண்டார். அதன் மூலமே பிரேமதாசா கொழும்பு ஏழிலிருந்து வாழைத் தோட்டத்துக்கு அழைத்துவரப்பட்டார்.

அதேபோன்று இப்போது சொலமனின் அல்லது சிறிமாவோவின் புத்திரர்களின் கட்சி எனக் கூறப்படும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி கொழும்பு "றோஸ்மீட்" பிளேசில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு மகிந்த ராஜபக்ஷவின் இடமான தென்பகுதியில் கிருவாபத்துவவில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பிரேமதாசா ஐ.தே .கட்சிக்குள் தனது நிலையை நிறுத்திக் கொள்ள பெரும்பாடு பட்ட நிலை போன்றே பண்டாரநாயக்க புதல்வர்களின் கட்சியான சி.சு.க.வில் மகிந்த ராஜபக்ஷவுக்கும் ஏற்பட்டுள்ளது. எனினும் பெரும் சவால்களையும் எதிர்ப்புக்களையும் முறியடித்துக்கொண்டு அரசியலில் உயர்ந்த நிலைக்கு பிரேமதாசா வந்தார். அதுபோல மகிந்தவும் எதிர்ப்புக்களை முறியடித்து சனாதிபதியாக வருவாரா? மகிந்த ராஜபக்ஷ என்பவர் சி.பி.டி சில்வா ரி.பி.இலங்கரத்ன, மைத்திரிபால சேனநாயக்க போன்றவர்கள் போன்று கட்சிக்காக உழைத்தவரே.

அன்று சி.பி.டி. சில்வா சுதந்திரக் கட்சியின் பிரதித் தலைவராக இருந்தார். ஆயினும் தனது எதிர்பார்ப்பு நிறைவேற்றப்படாமை மட்டுமன்றி போகச்சொல்லாது புகை போட்டுத் துரத்தியதால் ஐ.தே. கட்சியில் இணைந்தார். அதேபோன்றே மைத்திரிபால சேனநாயக்கவும் கட்சியின் பிரதித்தலைவராக இருந்து வந்தார். அவருக்கும் சி.பி.டி சில்வாவுக்கு நடந்த கதையே நடந்தது. அதே போன்றே மற்றொரு பெரும் புள்ளியான ரி.பி. இலங்கரத்னவுக்கும் நடந்தது. அவர் பிரிந்து சென்று புதிய ஒரு கட்சியை ஆரம்பித்தார்.

மகிந்த ராஜபக்ஷவுக்கும் இவ்வாறானதொரு நிலைமை ஏற்படும் என்றே அனைவரும் எதிர்பார்த்தனர். அன்று சிறிலங்கா சுதந்திரக்கட்சி பிளவு பட்ட வேளையில் சந்திரிகா மீண்டும் லண்டனில் இருந்து வந்து கட்சியில் இணைந்த போது அனுரா பண்டாரநாயக்க ஐ.தே. கட்சிக்குத் தாவி இருந்தார். மகிந்தவும் அதேவழியில் சென்று விடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. மேலும் எஸ்.பி திசநாயக்க (அவர் இப்போது ஐ.தே. முன்னணியில் இருக்கின்றார்). சுதந்திரக் கட்சியின் செயலராக நியமிக்கப்பட்டமையும்

மகிந்த விலகுவதற்கான சூழ்நிலையை உருவாக்கியது. அவை மட்டுமன்றி அனுரா மீண்டும் சிறில.சு.கட்சியில் இணைந்து பிரதித் தலைவர் பதவிக்கு உரிமை கோரிய போதும் மகிந்த கட்சியிலிருந்து நீங்கிவிடுவார் என சிங்கள தேசம் எண்ணியது.

தற்போது ஜே.வி.பி வந்து சந்திரிகாவிடம் கூட்டுச்சேர்ந்ததையடுத்தும் மகிந்த விலகிச் செல்வார் என எண்ணத்தோன்றியது. ஆயினும் மகிந்த இன்னும் ஒரு இலங்கரத்ன போன்றோ சி.பி.டி. சில்வா போன்றோ தானும் ஆளாக விரும்பவில்லை

அவரைப் போ என்று சொல்லாமல் சொன்னபோதும் மாற்றான் தாயின் பராமரிப்புப் போல நடத்தப்பட்டாலும் ஐ.தே. கட்சிக்காக உளவு வேலை பார்ப்பவராகக் குற்றம் சாட்டப்பட்ட போதும் மிகவும் பொறுமையாக இருந்தார்.

இவருக்கு மட்டுமல்ல பிரேமதாசவுக்கும் இந்நிலை ஏற்பட்டது. 1977 தேர்தலுக்கு முன்பு அவர் உத்தியோக பூர்வம் அல்லாத பிரதித்தலைவராக நியமிக்கப்பட்ட பின் ஏனைய சிரேஷ்ட உறுப்பினர்கள் தாக்கிப் பேசினர். அவர் பிரதமராகப் பதவியேற்ற பின்னரும் அவரின் அரசியல் நடவடிக்கைகள் செல்லாக்காசாகவே கருதப்பட்டது. மகிந்தவுக்கும் இதேநிலையே இன்று ஏற்பட்டுள்ளது. அவருக்கும் றோஸமீட்பிளேசிற்குச் சென்று சுயமாகக் கட்சி நடவடிக்கைகளில் செயற்பட முடியாதுள்ளது. 1994 இல் பதவியேற்ற பொ.ஐ.முன்னணி காலத்திலும் தற்போது பதவியில் இருக்கும் ஐ.ம.சு.முன்னணி காலத்திலும் அவரை வரவேற்க ஒருவரும் இல்லை. அவருக்கு மறைமுகமான செயற்பாடுகள் நடைபெறுகின்றன. ஆயினும் அவர் பொறுமையிழக்காதுள்ளார்.

பிரேமதாசா 28 வருடங்களாகப் பிரதமராகும் கனவுடன் இருந்தார். மகிந்த 34 ஆண்டுகளாகப் பிரதமராகும் கனவுடன் இருந்தார். பிரேமதாசா சனாதிபதியாவதற்குப் பத்துவருடங்கள் காவல் இருக்க நேரிட்டது. ஆயினும் மகிந்தவுக்கு இன்னும் ஒன்றிரண்டு வருடங்களே பொறுமைகாக்க வேண்டும்.

பிரேமதாசா பத்து வருடங்களாகக் காத்திருந்தாலும் ஜே.ஆரின் பாவங்களில் பங் கெடுக்காமல் ஒதுங்கியே இருந்தார். அந் நாடகங்களிலும் நாடு பாரியபிரச் சினைகளுக்குள்ளாகியே இருந்தது. ஜே.ஆர் (இந்தியாவுடன்) ராஜீவ் காந்தியுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் ஒன்றினால் தென்பகுதி மக்கள் அவரை வெறுக்கத் தொடங்கினர். அத்து டன் அவர் பிரேமதாசாவுடன் கலந்தாலோசிக்காமலும் தெரியாத வகையிலும். இந்த ஒப்பந்தத்தைச் செய்தார் அப்போதும் பிரேமதாச இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தார். ஆகவே நாட்டில் அப் போது ஏற்பட்ட பிரச்சினைகளான மாகாண சபைமுறை, இந்திய உடன்படிக்கை போன்றவற்றிலிருந்து பிரேமதாச ஒதுங்கியே இருந்தார்.

இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அப்போதைய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குறிப்பாக ஜே.வி.பி.யின் றோகணவிஜேவீர போன்றோர் இவரை தம்பக்கம். திசைதிருப்ப முயன்றனர். பிரேமதாச நல்லவர் ஜே.ஆரே நாட்டை அழிவுக்கு இட்டுச் செல்கிறார் என்ற விமர்சனங்களும் அன்று எழுந்தன.

எனினும் எதிர்க்கட்சிகளினது வாயை மூடும் நோக்கில் பிரேமதாசவுக்கு சனாதிபதி வேட்பு உரிமையை கொடுத்து ஜே.ஆர். தப்பி விட்டார்.

பிரேமதாச அப்போது மக்களிடம் "எனது தகுதிக்கு நீங்கள் வாக்களியுங்கள் கட்சியிலிருக்கும் அடுத்தவர்களின் தகுதியீனத்தைக் கருத்தில் கொண்டு எனக்கு வாக்களிக்காமல் விடாதீர்கள்" என்று கேட்டார்.

அதுபோன்றே இன்று மகிந்தராஜ பக்ஷவுக்கு இருக்கும் ஒரேஒரு செல்வாக்கு-தகுதி அவர் ஒரு பௌத்தமத ரட்சகர். அதனாலேயே பிக்குகளை தாக்கியதையும் அவர் வன்மையாகக் கண்டித்தார்.

அத்துடன் விடுதலைப்புலிகளிடம் இடைக்கால நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டால் அதனை எதிர்க்கும் இயக்கத்து தலையேற்பவரும் அவரே.

ஆகவே மகிந்த இப்போதே பிரேமதாசவின் நாடகத்தை ஆரம்பிக்கின்றார் போல் தோன்றுகிறது.

1988 ஆம் ஆண்டு பிரேம தாசவுக்கு இருந்த ஒரே பலம் பௌத்த தலைமையும், இந்திய- இலங்கை உடன் படிக்கை எதிர்ப்புமே. அதேபோன்று இன்று இடைக்கால நிர்வாக சபை வழங்குவதைத் தடுக்கும் ஒரு சக்தியே மகிந்தவிடம் காணப்படுகிறது.

சந்திரிகா நாட்டைச் சீரழிக்கிறார். மகிந்தவுக்கு ஒன்றும் தெரியாதது போல் இருக்கிறார் என்று எதிர்க்கட்சிகள் விமர்சித்து கட்சியை பிளவுபடுத்த எண்ணினாலும் மகிந்தவை சனாதிபதி வேட்பாளராக நிறுத்த சந்திரிகா முடிவு செய்தால் எதிர்க்கட்சிகள் வாயை மூடிக்கொள்ளும்.

எனினும் கறுவாத் தோட்டக் கட்சியினர் தலைமைப் பதவியை வாழைத்தோட்டத்தவருக்கு வழங்கியது. போன்று சொலமனின் கட்சி தனது தலைமையை கிருவாபத்துவிலுள்ள ஒருவருக்கு வழங்குமா என்பதே பிரச்சினை.





அன்று சொலமன் வெஸ்ட்ரிஜ்வே டயஸ்பண்டாரநாயக்க தமது புத்திரர்களிடம் கட்சித்தலைமையை பொறுப்பளிக்க எண்ணவில்லை அவர் தன்னோடு ஒட்டியிருந்த ராஜபக்ஷ பரம்பரையினர் பற்றி சிந்தித்தார். 1956ஆம் ஆண்டில் தேர்தலின் போது தங்காலையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பொதுமக்கள் முன்னிலையில் டி.ஏ. ராஜபக்ஷவுக்கு தகுந்த இடம் கொடுத்தார்.

**உப்புள் ஜோசப் பர்னாந்து**
**(லங்காதீப)**
**தமிழில்: வடிவேல்**

அத்துடன் "நான் அன்று ஐ.தே. கட்சியிலிருந்து பிரிந்து வந்ததும் எனக்கு முன்பு விலகிவந்து எனது பக்கத் துணையாக நிழல் போல தொடர்ந்த எனது நண்பன் டி.எம். ராஜபக்ஷ அவர்களின் சந்ததியினர் முழுதும் எனது நண்பர்களே இந்த நன்றியை எதிர் காலத்திலும் மறக்கக் கூடாது அவர்களின் சேவைகளையும் மறந்து விடக்கூடாது" எனத் தெரிவித்தார். இதனால் ராஜபக்ஷவுக்கு கிடைக்க வேண்டிய இடத்தை வழங்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இச்சந்தர்ப்பத்தையும் விட வேறொன்று கிடையாது.

## சத்திர சிகிச்சை நிபுணர் இல்லை வைத்திய நிபுணர் பரிதாப மரணம்

(கொழும்பு)

விபத்தில் சிக்கிய வைத்திய நிபுணர் சத்திர சிகிச்சை நிபுணரின் காலதாமதத்தால் உயிரிழந்தார்.

காது, மூக்கு, தொண்டை நிபுணரான ஏ.என்.பொன்ராஜா என்ற குறித்த வைத்திய நிபுணர் சென்ற செவ்வாய் வீதி விபத்தொன்றில் சிக்கி கொழும்பு தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இவர் அனுமதிக்கப்பட்டு வெகு நேரத்திற்கு உரிய சத்திரசிகிச்சை நிபுணர் வராமையால் இரண்டு மணி நேரத்தில் உயிரிழந்துள்ளார். விபத்து விடுதியில் இவ்வைத்திய நிபுணர் அனுமதிக்கப்பட்ட நேரத்தில் உரிய சத்திரசிகிச்சை நிபுணர் கடமையில் இருந்து உடனடியாகவே சத்திர சிகிச்சை மேற்கொண்டிருந்தால் இவரின் உயிரைப் பாதுகாத்திருக்கலாம் என வைத்தியர்கள் கூறுகின்றனர். இவ்வைத்திய நிபுணரின் மரணம் குறித்து சிறிலங்கா சுகாதார அமைச்சு விசாரணைகளை நடாத்தி வருகின்றது. பொன்ராஜா பதுளை வைத்திய சாலையில் காது,மூக்கு, தொண்டை நிபுணராகக் கடமையாற்றியவர் ஆவார்

## மட்டக்களப்பில் படையினர் சோதனை நடவடிக்கை தீவிரம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்காகப் படையினரின் சோதனைக் கெடுபிடிகள் அதிகரித்துக் காணப்படுவதால் பொதுமக்கள் பல அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

வவுணதீவு, பட்டிருப்பு, செங்கலடி, மண்முனைச் சோதனைச் சாவடியூடாகச் செல்லும் பொது மக்களைத் தீவிர சோதனைக்கு உட்படுத்துகின்றனர். தமது அடையாள அட்டைகளை எடுத்துச் செல்லாதவர்களை சோதனைக்கு உட்படுத்தி நீண்ட நேரம் வரை தடுத்து நிறுத்துகின்றனர். மட்டக்களப்பு நகர்ப் பகுதியில் மோட்டார் சைக்கிள் மற்றும் ஏனைய வாகனங்களில் செல்வோர் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர். வீதிகளில் திடீர் திடீரென வாகனங்களை நிறுத்தியும் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர்.

## யானை தாக்கி குடும்பஸ்தர் பலி

உன்னிச்சைக்காட்டுப் பகுதியில் கடந்த வியாழனன்று யானை தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்ததுடன் மற்றும் ஒருவர் படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். வவுணதீவுக் காஞ்சிரங்குடாவைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான முருகேசு மாணிக்கப்போடி (வயது55) என்பவரே உயிரிழந்தவராவார். இதே ஊரைச் சேர்ந்த க.வயிரமுத்து என்பவர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# கடந்த வாரத்தில்....

## 01.07.2004 - 07.07.2004

### 01.


★துருக்கியில் இருவேறு இடங்களில் ஏற்பட்ட நில நடுக்கத்தில் 25பேர் பலி. 50 பேர் காயம்.

★தேரோட்டம் நடந்த சிவகங்கை மாவட்டம் கண்டதேவி கிராமத்திற்கு தடையை மீறிப் புறப்பட்டுச் சென்ற விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் திருமாவளவன் உட்பட 200 பேர் பொலிஸாரால் கைது.

★ஈராக்கின் பலூஜா நகரில் ஜோர்தான் தீவிரவாதிகளின் பாதுகாப்பு இல்லத்தை அமெரிக்கப் படையினர் முற்றாக நிர்மூல மாக்கினர்.

★சவுதி அரேபியாவில் உள்ள அல்-ஹைதா உறுப்பினர்களின் ஆன்மீகத் தலைவராக இருந்த அப்துல்லாஹித் அல்ரஸத் சவுதி பாதுகாப்பு அதிகாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

### 02.


மக்கள் ஆர்ப்பாட்டம்

★தமது உரிமைகளை வழங்கக் கோரி பெருமளவு ஹொங்கொங் மக்கள் சீன அரசுக் கெதிராக ஆர்ப்பாட்டம்.

★துருக்கியின் வட-கிழக்கு மாகாணமான அகரியில் 5.1 என்ற றிக்டர் அளவில் பதிவாகிய நிலநடுக்கத்தினால் 20 பேர் பலி. 40 பேர் காயம். நூற்றிற்கு மேற்பட்ட வீடுகள் தரைமட்டம்.

★கிழக்குத் துருக்கியின் ஆர்சுரம் மாகாணத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டத்தில் 5பேர் பலி. 10பேர் காயம்.

★அமெரிக்க இராஜாங்க செயலர் கொலின் பவல் வடகொரிய வெளியுறவு அமைச்சர் யயீக்ரம் சுன்னை•இந்தோனேசிய தலைநகர் பீஜிங்கில் கடந்த வாரம் ஆறு நாடுகள் கலந்துகொண்டு நடத்திய பேச்சுவார்த்தைகளில் முன்மொழியப்பட்ட விடயங்கள் குறித்தும், அவற்றை முன்நகர்த்திச் செல்வது குறித்தும் கலந்துரையாடினர்.


தாக்குதலின் பின் பாதுகாப்பு

★பாக்தாத்தில் உள்ள சேர்தான் ஹோட்டல், பாக்தாத் ஹோட்டல், வாகனத்தரிப்பிடம் ஆகியவற்றின் மீது றொக்கட் தாக்குதல் நடத்தப்பட்டது.

★தென்கிழக்கு ஆசிய நாடுகளின் (ஆசியான்) பிராந்திய அமைப்பில் உறுப்பு நாடாகப் பாகிஸ்தான் முறைப்படி சேர்க்கப்பட்டது.

### 03.

★அணுவாயுதங்களை ஏந்திச்சென்று 700கி.மீ.இலக்கைத் தாக்கும் புதிய குறுந்தூர அக்கினி ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாகப் பரீட்சித்தது.

★பாக்தாத்தின் தென் பகுதியில் துறைமுகங்களுக்கு எண்ணெய் விநியோகிக்கும் எண்ணெய்க் குழாய்களில் ஒன்று சேதப் படுத்தப்பட்டது.

### 04.

★பலஸ்தீன போராளி ஒருவர் மறைந்திருந்து மேற்கொண்ட தாக்குதலொன்றில் இஸ்ரேலியர் ஒருவர் கொல்லப்பட்டார்.



மகனைஇழந்த சோகத்தில்

★இஸ்ரேலியர்களின் உலங்குவானூர்தி காஸாக்கரையோர எல்லைப் பகுதியில் தாக்குதல் நடத்தியதில் 6 பலஸ்தீன பொது மக்கள் படுகாயமடைந்தனர்.

★நியூயோர்க்கில் விமானங்கள் மோதி தகர்ந்த உலக வர்த்தக மையக்கட்டடங்கள் இருந்த இடத்தில் "சுதந்திர கோபுரம்" எனப்படும் உலகின் மிக உயரமான கட்டடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

### 05.

★இந்திய மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய உறுப்பினர்கள் பதவியேற்றனர்.


வெற்றிக்களிப்பில்

★போர்த்துக்கல்லில் லிஸ்பன் நகரில் யூரோ 2004 கால்பந்து இறுதிப் போட்டியில் போர்த்துக்கல் அணியை 1-0 என்ற கோல் எண்ணிக்கையில் கிரீஸ் அணி வென்று யூரோக் கிண்ணத்தைச் சுவீகரித்துக்கொண்டது.

★பலஸ்தீனத்தின் காஸாப்பகுதியில் இரண்டு உலோகத் தொழிற்சாலைகளின் மீது இஸ்ரேல் விமானப் படையினர் தாக்குதல்கள் நடத்தினர்.

### 06.

★புதுடில்லியில் இந்திய நோர்வே வெளியுறவு அமைச்சர்கள் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக ஆராய்ந்தனர்.

★இந்தோனேசிய சனாதிபதியை முதன் முறையாக தேர்தல்மூலம் தெரிவுசெய்வதற்கு மக்கள் வாக்களித்தனர்.


தேர்தல் பணியில்

★பலஸ்தீனத்தின் தலைநகரில் இடம் பெற்ற தாக்குதல் சம்பவங்களில் ஒரு படை வீரர், நான்கு பலஸ்தீனர்கள் கொல்லப் பட்டனர்.

★ஒஸ்ரிய சனாதிபதி றோமல் கிரைல்ரின் விபன்னாவிலுள்ள வைத்திய சாலையில் காலமானார்.

★ஈராக்கின் மேற்குப் பாக்தாத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் நான்கு அமெரிக்கக் கடற்படையினர் கொல்லப்பட்டனர்.

★ஈராக்கின் வடக்குப் பகுதியில் உள்ள ஹீஸீர் என்னும் இடத்தில் இரண்டு நாட்களின் முன் சுட்டுக்கொல்லப்பட்டவரின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டவர்கள் மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 15பேர் பலி. 30பேர் காயம்.


மரணச்சடங்கில் தாக்குதல்

★நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சூல் ஹெய்ம் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கத்தை லண்டனில் சந்தித்து அண்மையில் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது ஆராயப்பட்ட விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடினர்.

### 07.

★நேபாளத்தில் இராணுவம் மற்றும் மாவோ போராளிகளுடன் ஏற்பட்ட மோதலில் 11 இராணுவத்தினர் உட்பட 28பேர் பலி.

---

- கெயார் நிறுவன உதவியுடன் -

# உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தால் பூநகரியில் பல வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பு

(அலுவலக செய்தியாளர்)

உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தினரால் பூநகரிப் பகுதியில் சாமிப்புலம், நல்லூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 50 பயனாளிகளுக்கு நீர்இறைக்கும் இயந்திரங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

கெயார் நிறுவன நிதியுதவியுடன் உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தினரால் 2003ஆம் ஆண்டுக்கான வன்னி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சாமிப்புலம், நல்லூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 50பயனாளிகளுக்கு 10 நீர் இறைக்கும் இயந்திரங்களும், 05 தெளிகருவிகளும் அன்பளிப்புச் செய்யப்பட்டன. கடந்த வியாழனன்று நடைபெற்ற இவ் அன்பளிப்பு நிகழ்விற்கு கெயார் நிறுவனப் பிரதிநிதிகள், தமிழர் புனர்வாழ்வுக்கழக சமூகஉணர்வூட்டல் பகுதி இணைப்பாளர் கோபிநாத், பூநகரி அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர், கிராமிய புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர், ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தினரால் 2003ஆம் ஆண்டு வேலைத்திட்டத்தின் கீழ் சாமிப்புலம், நல்லூர் ஆகிய கிராம பயனாளிகள் 25பேருக்கு கால்நடை வளர்ப்பு மானியமும், சுழற்சிக் கடனாக 3,20,000 ரூபாய் பணமும் வழங்கப்பட்டதோடு, 5,50,000 ரூபாய செலவில் பொது நோக்கு மண்டபமும், 3,00,000 ரூபாய் செலவில் மூன்று பொதுக்கிணறுகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

மேலும் இவ் உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களாகப் பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் ஜீவனோபாய வருமானத்தை அதிகரிப்பதாகவே அமைந்துள்ளது என அந்நிறுவனத்தின் இணைப்பாளர் கே.தேவிகா தெரிவித்தார். இந் நிறுவனத்தின் அடுத்தகட்டச் செயற்பாடாக பூநகரிப் பிரதேசத்தில் பால்நிலை சமத்துவம் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகளையும் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளையும் நடத்தவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# "வெளிச்சம்" வெளிவந்துள்ளது

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகத்தின் கலை, இலக்கிய சமூக இதழான வெளிச்சத்தின் எண்பத்தாறாவது இதழ் வெளிவந்துள்ளது.

இந்த இதழில் தமிழீழத் தேசியத்தலைவரின் கருத்துரையுடன் மாலிகா, சித்தாந்தன், வேரற்கேணியன், நல்லை அமிழ்தன், புதுவை இரத்தினதுரை, ப. அருள்நேசன், தி.திருக்குமரன் ஆகியோரின் கவிதைகளும், நந்தி, தீபா குமரேஷ் ஆகியோரின் சிறுகதைகள், பேராசிரியர் கா.சிவத்தம்பியின் கடலும் தமிழ்ப்பண்பாடும் என்ற நீண்ட சிறப்புக்கட்டுரையுடன், ஞானரதன், செங்கையாழியான் ஆகியோரின் கட்டுரைத் தொடர்களுடன் சொக்கன், தி. தவபாலன் முதலியோரின் ஏனைய கட்டுரைகளும் அடங்குகின்றன.

மூத்த எழுத்தாளர் சிற்பி சரவணபவனின் நேர்காணல், அநாதரட்சகன், வைரமுத்து சுந்தரேசனின் நூல் ஆய்வுகளும், கவிஞர் வாமகாந்த், நாட்டுப்பற்றாளர் ஜி.நடேசன் முதலியோருக்கான அஞ்சலிகளும் புதிய வரவு, நூல் அறிமுகம் முதலியனவும் இடம் பெற்றிருக்கின்றன.

- தமிழீழ காவல் துறையினரால் -

# வாகனச் சாரதிகளுக்கு வீதி ஒழுங்கு அறிவூட்டல்

தமிழீழ காவல்துறையின் குற்றத்தடுப்பு பிரிவினரால் நடுவப் பணியகத்தில் கடந்த வெள்ளியன்று போக்கு வரவு கழகத்தின் வாகன சாரதிகளுக்கானதும் தனியார் வாகன சாரதிகளுக்குமான, வீதி ஒழுங்கு சம்பந்தமான கருத்தூட்டல் செயலமர்வு நடைபெற்றுள்ளது.

காவல்துறை நடுவகப்பணியகக் கண்காணிப்பாளர் சி.மாதவன் தலைமையில் நடைபெற்ற இச் செயலமர்வில் வீதியைப் பயன்படுததும் நடைமுறை பற்றியும், விபத்தின்றி வாகனத்தை செலுத்துவது பற்றியும் தெளிவு படுத்தப்பட்டது. இதன் கருத்துக்களை தமிழீழ காவல்துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவுக் கண்காணிப்பாளர் கு.கனகலிங்கம் நிகழ்த்தியுள்ளார். இது போன்ற கருத்தூட்டல் செயலமாவுகள் தொடர்ந்தும் நடாத்த ஒழுங்குகள் மேற்கொளளப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# தாயகம் திரும்பிய 17 பேர் இந்திய கடற்படையால் கைது

(மன்னார்)

இராமேஸ்வரத்திலிருந்து தாயகம் திரும்பிய 17பேரை தலைமன்னாரில் வைத்து இந்தியக் கடற்படையினர் கடந்த வெள்ளியன்று கைது செய்துள்ளனர்.

இவர்களில் 11ஆண்களும், 05 பெண்களும் ஒரு குழந்தையும் அடங்குகின்றனர். இவர்கள் கோயம்புத்தூர் மாவட்டம் கும்புறுபிட்டி அகதி முகாமைச்சேர்ந்தவர்கள். இவர்களிடமிருந்த பட்டுப் புடவை, செல்போன், வீடியோ கசற் எனப் பல பொருட்கள் கைப்பற்றப்பட்டு சுங்க லாகாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கைதுசெய்யப்பட்டோர் மீது தற்போது இராமேஸ்வரப் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (மி)

# கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்த வலியுறுத்து

(புதுக்குடியிருப்பு)

கட்டாக்காலியாகத் திரியும் கால் நடைகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்துள்ளதாகத் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின முல்லை. மாவட்ட கால்நடைப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

கட்டாக்காலி கால்நடைகளால் புதுக்குடியிருப்புப் பகுதியில் மேற்கொளளப்பட்டுள்ள சிறுபோக நெற் செய்கையும் பாதிப்படைந்துள்ளமை தெரியவந்துள்ளது. எனவே கால்நடை வளர்ப்போர் கால்நடைகளை உரிய முறையில் பராமரிக்கத் தவறும் பட்சத்தில் கடுமையான நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார் எனத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கால்நடைப் பகுதியினர் தெரிவித்துள்ளனர். (08)

# தமிழ் இனத்தைக்காக்கும் கடமையைச் செய்யும் சக்தியை ஈழத்தமிழர் பெற்று வருகின்றனர்!

## அமைச்சர் சந்திர சேகரன் வலியுறுத்து

தமிழ் இனத்தின் தனித்துவத்தை பாதுகாக்கக்கூடிய வலிமை இந்திய நாட்டில் தமிழர்களுக்கே அதிகம் உள்ளது. இந்த சமூகக் கடமையை செய்து முடிக்கக்கூடிய சக்தியை ஈழமக்கள் தற்போது பெற்று வருகின்றனர். இவ்வாறு உலகத்தமிழர் பண்பாட்டியக்கத்தின் மாநாட்டில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றிய மலையக மக்கள் முன்னணித் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் தெரிவித்துள்ளதாவது:-..

தமிழர்கொடி, தமிழர் தனித்துவம், தமிழ் உணர்வு போன்றவற்றை வலியுறுத்துகின்ற உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கம் தமிழர்களை உலகம் முழுவதிலும் தமிழருக்கென்று ஒரு முகவரியை உருவாக்குவதில் அக்கறை காட்டி வருகின்றது.

தமிழ் இனத்திற்கான இயக்கமாக செயற்பட்டவர்களின் முயற்சிகள் பல அரசியல் காரணத்திற்காக ஒவ்வொரு காலகட்டத்திலும் அவமானப்படுத்தப்பட்டு இருக்கின்றது.

தமிழ் இனத்தின் தனித்துவத்தை பாதுகாக்கக்கூடிய வலிமை இந்திய நாட்டில் தமிழருக்கே அதிகம் உள்ளது. இந்த சமூகக் கடமையை செய்து முடிக்கக்கூடிய சக்தியை ஈழ மக்களும் தற்போது பெற்று வருகின்றனர். நான் அறிந்தவரை இந்தியத் தமிழக தமிழர்களை விட இலங்கையிலிருந்து அகதிகளாகப் புலம் பெயர்ந்த தமிழர்கள் தங்களின் தனித்துவத்தை பாதுகாப்பதில் அதிக அக்கறை காட்டுகின்றனர் என்றே நினைக்கின்றேன். இந்திய நாட்டின் தமிழ் மொழி செம்மொழியாக ஆகும் என்பதை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது நமது இனத்திற்கு மிகப்பெரும் பாய்ச்சலாகும்.

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றிய மூத்த தமிழ்" என்ற வாசகம் கவிதையாகவே கணிக்கப்பட்டது. தற்போது தமிழ் மொழிக்கு உலகளாவிய அங்கீகாரத்தைப் பெற்றுத் தருவதற்கு தமிழ் மொழி செம்மொழி என்று பிரகடனப்படுத்தப்பட்டிருப்பது தமிழினத்திற்கு பெருமை சேர்க்கின்ற ஒன்றாகும்.

தமிழ் உணர்வு என்பது தமிழினத்தின் தாகத்தைத் தணிக்கும் நிவாரணமே. ஆனால் நமது மொழியை செம்மொழி என்பதற்கு வரலாற்றுச் சான்றுகளோடு அங்கீகாரம் பெறத்துடிக்கும் நேரத்தில் தமிழர் எவ்வளவு பேர் தூய்மையான தமிழைப் பேசுகின்றனர் என்பது கேள்விக்குறியாகி வருகின்றது. ஒரு மொழி செம்மொழியாக பிரகடனப்படுத்தப்படுவதாயின் அம்மொழி வேறு எந்த மொழியிலும் தங்கியிருக்கக் கூடாது. இது ஓர் அம்சமாகும்.

ஆனால் வேற்றுமொழி கலக்காத தூய தமிழில் மட்டும் பேசுகின்ற தமிழர்களைத் தமிழகத்தில் தேடிப்பிடிக்கவேண்டியுள்ளது. 'கலகம் பிறந்தால்தான் நியாயம் பிறக்கும்' என்பது கிராமியத் தமிழ் முதுமொழி. நாமே நமது தனித்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்ளச் சிறு போராட்டங்களை நடத்தியாக வேண்டியுள்ளது. தமிழுக்கு என ஒரு நாடு இல்லாததனால், தமிழர்களின் எண்ணங்களை ஆளும் இனம் ஏற்றுக்கொள்ள மறுப்பதனால் தமிழர்களைப் பற்றிப் பேசுவதும் தமிழர்களுக்காகப் போராடுவேன் என்பதும் பிரிவினை வாதமாகப் பார்க்கப்படுகின்றது.

உலகத்திற்கு புதுத் தத்துவங்களை வழங்க முயற்சித்த யேசுபிரானும், நபிகள் நாயகமும் அக்கால அரசினால் பயங்கரவாதிகளாகவே சித்தரிக்கப்பட்டார்கள். உலகம் உருண்டையானது என்று சொன்ன விஞ்ஞானிகள் கூட மரணதண்டனைக்கு ஆளாக்கப்பட்டதாக வரலாறு சொல்கின்றது.

பயங்கரவாதியெனச் சொல்லப்பட்டு பல பத்து ஆண்டுகள் சிறையில் தண்டனை அனுபவித்த நெல்சன் மணடேலா இன்று உலகம் போற்றும் உத்தமராகக் கணிக்கப்படுகின்றார். தமிழகத்தில் வைணவமும் சாக்த சமயமும், சமணசமயமும்,பௌத்த சமயமும் மோதிக்கொண்ட நேரத்திலும் அந்த ஆன்மீகவாதிகளைக் கூடப் பயங்கரவாதிகளாகக் கணித்து அரசு செயற்பட்டதை வரலாறு காட்டுகின்றது. இன்று தமிழினத்திற்காக குரல் கொடுத்தால் அதற்குச் சட்டம் தடையாக இருக்குமென்ற அச்சுறுத்தல் மேலோங்கி வருகின்றது. இதிலிருந்து தமிழினம் விடுபட்டால் மட்டுமே தமிழ்மொழி செம்மொழி என்ற அந்தஸ்தை நாம் அனுபவிக்க முடியும். எனவே தடைகளைத் தாண்ட தயாராகவும் தமிழினத்தைத் தலைநிமிர வைப்போம் என அனைத்துத் தமிழ் சக்திகளையும் அணி திரட்டவும் வேண்டும். இந்த முயற்சியின் வெற்றியில்தான் உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் வெற்றி தங்கியிருக்கிறது.

நமது எண்ணங்களை ஆதரிப்பதைவிட நமது எழுச்சியை அரசியல் காரணத்திற்காக எதிர்ப்பவர்களின் எண்ணிக்கையை இல்லாமலாக்குவோம்.

இலங்கையின் வடக்குக் கிழக்கிலே 30 ஆண்டுகாலம் சனநாயக ரீதியிலான போராட்டமும், ஆயுதப்போராட்டமும் நடந்துள்ளது. அதேநேரம் இந்திய வம்சாவழி மக்கள் இலங்கையில் தேயிலை, இறப்பர், போன்ற பெருந்தோட்டத்துறையிலே தொழிலாளர்களாக இருப்பவர்களின் துன்பம் வடக்குக் கிழக்கில் வசிக்கும் தமிழ் மக்களின் நிலையை விட வேறுபட்டதல்ல. ஏறத்தாழ 200 வருடங்களுக்கு முன்பு தமிழகத்திலிருந்து தொழிலுக்காக வெள்ளையர்களால் அழைத்துச் செல்லப்பட்ட தமிழர்களின் அரசியல் நிலை இன்று கேள்விக்குறியாகவே உள்ளது. இதற்குக் குரல் கொடுக்க வேண்டிய பொறுப்பும், கடமையும், இந்திய அரசியல் தலைமைகளுக்குள்ளது என்பது இந்த மகா நாட்டில் பதியப்பட வேண்டுமென நான் விரும்புகிறேன். (32)

## இந்தியச் சிறையிலிருந்த இலங்கைப் பிரஜை மரணம்

(கொழும்பு)

இந்தியா - தமிழகத்தில் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கை வாசி ஒருவர் உயிரிழந்துள்ளார்.சென்னையிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயம் இதுபற்றி சிறிலங்கா வெளிவிவகார அலுவல்கள் அமைச்சின் அயல் நாட்டு விடயங்கள் பிரிவிற்கு அறிவித்துள்ளது.

ஜோசப் மைக்கல் ராஜாமணி பெர்னாண்டோ என்ற நபர் திருவனந்தபுரம் மத்திய சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார் என்றும் நோய்வாய்ப் பட்டதை அடுத்து திருவனந்தபுரம் வைத்தியசாலை மருத்துவக் கல்லூரியில் உயிரிழந்துள்ளார் என்றும் வெளிநாட்ட மைச்சின் செய்திக் குறிப்பொன்று கூறுகின்றது.உயிரிழந்த நபர் வத்தளையைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## புனர்வாழ்வு நிலையம் அமைக்கத் தீர்மானம்

(மன்னார்)

மன்னாரில் போதைப்பொருள் சம்பந்தமான குற்றச்சாட்டுக்களின் பேரில் கைதாகிச் சிறைவாசம் சென்று திரும்புவோருக்கு புனர்வாழ்வு அளிக்க புனர்வாழ்வு நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது

மன்னார் அரச அதிபர் இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளார். இதன் நிமிர்த்தம் சகல பிரதேச செயலர் பிரிவுகளில் கிராம சேவகர்கள் ஊடாக விபரங்களைத் திரட்ட அரச அதிபர் பணித்துள்ளார். (மி)

## விபத்துக்கள் ஏற்படலாம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் இருந்து திருவையாற்றிற்குச் செல்லும் வீதியில் கோவிந்தன் கடைசந்தியில் அமைந்துள்ள பாலம் எவ்விதமான தடுப்புச் சுவர்களும் இன்றிக் காணப்படுகின்றது. அதனுடன் மூன்று வீதிகளும் சங்கமிக்கும் இடத்தில் மேடான பகுதி ஒன்றும் உள்ளதால் இவ்விடத்தில் வீதி விபத்துக்களும் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே இதனைச் சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் எடுத்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டு கொள்ளப்படுகின்றனர். (15)

## முன்பள்ளி திறனாய்வு நிகழ்வு

(கிளிநொச்சி)

விசுவமடு திருச்சபை முன்பள்ளி சிறார்களின் திறனாய்வு நிகழ்வு கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்றது.

வணக்கத்திற்குரிய நிபில் ரூபராஜ் தலைமையில் நடை பெற்ற இந் நிகழ்வில் மங்கல விளக்கினை அருட்திரு ர.அனுகூலன ஏற்றி வைத்தார். தமிழீழ தேசியக் கொடியினை விசுவமடுப் பிரதேசப் பொறுப்பாளர் திலகன் ஏற்றிவைத்தார்.

முன்பள்ளிக்கொடியினை திருமதி ஜெ.கனகசபாபதி ஏற்றிவைத்தார். பெருந்தொகையான சிறார்கள் கலந்துகொண்ட இந்நிகழ்வின் இறுதியில் சிறுவர்கள் பரிசில் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். நன்றி உரையினை ஆசிரியர் திருமதி எம்.எ அமலநாதன் நிகழ்த்தினார். (15)


**P.S.T Technology (Pvt) Ltd**
**பி.எஸ்.ரி. தொழில்நுட்பம்**
[கச்சேரி அருகாமை, கிளிநொச்சி.]

* கணினிப்பயிற்சி வகுப்புக்கள்
* நிழற்பிரதியாக்கல் (போட்டோகொப்பி)
* லெமனேற்றிங்
* சிங்கள மொழி வகுப்புக்கள்

குறிப்பு:- சிங்கள மொழிவகுப்புக்கள் அரச அரசசார்பற்ற, தனியார் நிறுவனங்களில் வேலைசெய்பவர்களுக்கு வசதியானபடி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. வகுப்புகளுக்குரிய மாணவர் தொகை மட்டுப்படுத்தப்பட்டிருக்கும். இவ் வகுப்பு 14.07.2004 புதன்கிழமை ஆரம்பமாகவுள்ளதால் முற்கூட்டியே பதிவுகளை மேற்கொள்பவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர். பதிவின் போது நேரத்தினைப் பெற்றுக்கொள்ளவும்.

நிர்வாகம்.
(4804)



**சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை**
**ஆசிரியர் பயிற்சிநெறிக்கு பட்டதாரிகளிடமிருந்து**
**விண்ணப்பங்கள் கோரல்**

தமிழீழப்பிரதேச பாடசாலைகளில் நிலவும் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்வதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆங்கில ஆசிரியர் பயிற்சி நெறிக்கு பல்கலைக்கழகப் பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பயிற்சிநெறி முற்றிலும் இலவசமானது பயிற்சிக்காலத்தின் போது கொடுப்பனவுகள் வழங்கப்படும்,

பயிற்சிக்காலம்: 06மாதங்கள்

விண்ணப்ப முடிவுத்திகதி: 31.07.2004

கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் ஆங்கில ஆசிரியர் பயிற்சி நெறி எனக் குறிப்பிட்டு விண்ணப்பதாரிகள் தமது சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தினை உரிய திகதிக்கு முன்னதாக பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி வேண்டப்படுகின்றது.

தலைவர்,
தலைமைச்செயலகம்,
சர்வதேச தமிழீழ மாணவர்பேரவை,
பரமேஸ்வராச்சந்தி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம

தொலைபேசி இல- 021 222 3942
021 222 3768

(சி.10012)


## சிரமதானம்

(கிளிநொச்சி)

யூலை மாத உலர் உணவு விநியோகத்திற்கான சிரமதானப் பணி வட்டக்கச்சிப் பிரதேசத்தில் 6 ஆம் திகதி தொடக்கம் நடைபெற்று வருகின்றது. வட்டக்கச்சி தெற்கு அ.த.க பாடசாலை வளாகமும், மாயவனூர் மயான வீதியுமே சிரமதானப் பணி மூலம் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றது. எனவே இச் சிரமாதானப் பணியில் இப்பகுதி வாழ்மக்களை கலந்துகொள்ளுமாறு கிராம சேவகர் கேட்டுள்ளார்.(12,15)

## கண்டெடுப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி சந்தைப்பகுதியில் மோதிரம் ஒன்று கண்டுடெடுக்கப்பட்டுள்ளது. கடந்த 26.06.2004 அன்று எடுக்கப்பட்ட இம் மோதிரம் இதுவரை யாரும் உரிமை கோராமையினால் வருவாய்பகுதி கிளிநொச்சி செயலகத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. உரித்துடையவர்கள் வருவாய் பகுதி செயலகத்தில் ஆதாரத்தைக் காட்டிப்பெற்றுக் கொள்ளவும்.

## ஆசிரிய ஆலோசகர் நியமனம்

(வவுனியா)

வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் உடற்கல்வி ஆசிரிய ஆலோசகராக ஜனாப் எ.எம் சுபைர் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் தியாகலிங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ளார். -(10)


**நெஞ்சைவிட்டகலாத 31ஆம் நாள் நினைவஞ்சலி**

*அன்பின் அமரர்*
*திரு. காசிநாதர் பொன்னம்பலம் அவர்கள்*

(கண்டாவளைப் பிரிவு பிறப்பு,இறப்புப் பதிவாளரும், கரைச்சிப்பிரதேச விவாகப் பதிவாளரும் குமாரவேலர் சித்தர்தில்லை நாச்சன் வழித்தோன்றலும்)

கண்டாவளை திருநகர் ஈன்றெடுத்த மண்ணின் தவப்புதல்வன் அமரர் அன்பின் திரு. காசிநாதர் பொன்னம்பலம் (றிஜிஸ்ரார்) அவர்கள் வழமையான பதிவாளர் கடமையோடு புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய அன்னதான சபையின் தலைவராக இருந்து ஆண்டுதோறும் பங்குனி உத்தரப் பொங்கலிற்கு வருகைதந்து, பல்லாயிரக் கணக்கான அடியார்கட்கு இரவும், பகலும் அன்னதானம் வழங்கியதோடு, ஆலய வளர்ச்சிக்கும் அரும் தொண்டாற்றிய பெருந்தகை. கண்டாவளை கோணங்குளம் கற்பகவிநாயகர் ஆலய அறங்காவல் சபையின் தலைவராக இருந்து ஆற்றிய பணிகளை சந்ததி, சந்ததியாக எவரும் நெஞ்சில் இருத்தி நினைவுகூர்ந்த வண்ணமே இருப்பார்கள் என்பதற்கு எதுவித ஐயமுமில்லை. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைத் தினமும் பிரார்த்திக்கின்றோம்.

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய
தர்மகர்த்தா சபையினரும், பரிபாலன சபையினரும்.
(4800)

# சேது சமுத்திரத்திட்ட நிறைவேற்றம் நாட்டின் பாதுகாப்பை வலுப்படுத்தும்

## -மத்திய அமைச்சர் ரி.ஆர்.பாலு நம்பிக்கை

(சென்னை)

**“சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் நாட்டின் பாதுகாப்பு வலுப்படும் என்றும், 60 ஆயிரம் தொன் கொள்வனவு கொண்ட கப்பல்கள் தூத்துக்குடி வந்து செல்வதற்கான வாய்ப்புக்கள் ஏற்படும்.”**

இவ்வாறு மத்திய கப்பல் வீதிப் போக்குவரத்துத் துறை அமைச்சர் ரி.ஆர்.பாலு நேற்று முனதினம செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

சேது சமுத்திரத்திட்டத்தை நிறைவேற்றுவதில் தமிழக அரசும் பங்கு கொள்ள வேண்டும் என்றும் சேது சமுத்திரத்திட்டத்திற்கான கால்வாய அமைக்கும் போது புயலில் அழிந்து போன தனுஷ்கோடி மீட்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் தூத்துக் குடியில் நடைபெற்ற தூத்துக்குடி துறை முகப் பொறுப்பு கழக வெள்ளி விழாவில் தலைமை தாங்கிய அமைசசர் அதன் பின்னர் செய்தியாளர்களிடமே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# மாநிலங்களவைத் தேர்தலில் திருத்தம் மத்திய அரசு ஆதரிக்கத் தீர்மானம்

## - இன்று உச்ச நீதிமன்றில் விசாரணை

(புதுடில்லி)

மாநிலங்களவைத் தேர்தல் தொடர்பான மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத் திருத்தத்தை உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு ஆதரித்து விவாதிக்கவுள்ளது.

மத்தியரசின் தலைமை வழக்கறிஞர் இந்தச்சட்டத்தை ஆதரித்து வாதிடவுள்ளார் என்று புதுடில்லியில் நேற்று அரச வட்டாரங்கள் கூறியிருக்கின்றன.

மாநிலங்களவைத் தேர்தலில் வேட்பாளர்கள் அந்தந்த மாநிலங்களைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும் எனும் சட்டப் பிரிவை நீக்குவதற்கு வகை செய்யும் சட்டத்திருத்தம் பற்றி உச்ச நீதி மன்றம் இன்று விசாரணை செய்யவுள்ளது.

இந்தச் சட்டத்திருத்தத்தையும், வெளிப்படையான வாக்குப் பதிவு முறைகயையும் எதிர்த்து, பத்திரிகையாளர் குர்திரயார் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளார்.

இதனையடுத்தே இன்று இந்த வழக்கை உச்ச நீதிமன்றம் விசாரணை செய்யவுள்ளது. மத்தியரசு ஆதரித்து வாதிடவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# வெளிநாட்டு முதலீட்டு உச்ச வரம்பு உயர்வை நீக்கும் இடது சாரிகளின் கோரிக்கை நிராகரிப்பு

## - அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து ஆராய முடிவு

(புதுடில்லி)

தொலைத்தொடர்பு மற்றும் ஆயுட்காப்புறுதித் துறைகளில் வெளிநாட்டு முதலீட்டு உச்சவரம்பு உயர்த்தப்பட்டதை இரத்துச் செய்ய மத்தியரசு மறுத்துவிட்டது.

இதனையடுத்து அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து இடதுசாரிகளின் கட்சியின் அரசியல் விவகாரக்குழு புதுடில்லியில் இன்று தொடக்கம் விவாதிக்க வுள்ளது.

மத்திய வரவு செலவுத்திட்ட நிதிநிலைஅறிக்கையில் தொலைத் தொடர்புத்துறையில் வெளிநாட்டு முதலீடு 74 சதவீதமாகவும், விமானப் போக்குவரத்து, ஆயுட்காப்புறுதித் துறைகளில் 49 சதவீதமாகவும் உயர்த்தப்பட்டுள்ளன.

இதனை இரத்துச் செய்யுமாறு இடதுசாரிக்கட்சிகள் கோரிக்கை விடுதிருந்தன. ஆனால் மத்தியரசு மறுத்துவிட்டது.

இன்றைய காலகட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட், மார்க்சிஸ் கம்யூனிஸ்ட்,புரட்சிகர சோஷலிட், பார்வக் பிளக்உள்ளிட்ட கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்று ஆலோசனை நடத்தவுள்ளனர்.

# ஊழல் குற்றச் சாட்டிற்குள்ளானோரை பா.உ.பதவியிலிருந்து நீக்க வேண்டும்!

## நாடு தழுவிய ரீதியில் பாரதிய ஜனதா கண்டனக் கூட்டங்கள்

ஊழல் மற்றும் கிரிமினல் குற்றச் சாட்டிற்கு இலக்கானவர்களைப் பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று நாடு முழுவதும் பாரதிய ஜனதா தலைவர்கள் ஆர்ப்பாட்டக் கண்டனப் பொதுக் கூட்டங்களை நடத்தியுள்ளனர்.

நாட்டை அழிவுப் பாதைக்கு காங்கிரஸ் இட்டுச் செல்வதாக பாரதிய ஜனதா தலைவர் அத்வானி குற்றஞ் சாட்டியுள்ளார். பாரதிய ஜனதா கூட்டணி நேற்று முதல் ஒருவார காலம் இந்த நாடுமுழுவிய கண்டனப் பொதுக்கூட்டங்களை நடத்த வுள்ளதாகக் கூறியுள்ளது.

நேற்று அகமதாபாத்தில் தொடங்கிய கண்டனப் பொதுக் கூட்டத்தில் பேசிய அத்வானி குற்றப் பின்னணியுடையோரை பதவி நீக்காமலும், பொடோ சட்டத்தை மீளப் பெறுவது என்று முடிவு செய்வதன் மூலமும் காங்கி ரஸ் கட்சிநாட்டை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்வதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.இந்த கண்டனப் பொதுக் கூட்டம், அகமதாபாத், பெங்களூர், கௌகாஸி, கல்கத்தா, பாட்னா, மும்பை, சென்னை ஆகிய இடங்களில் நேற்று ஆரம்பமாகியுள்ளது.

# ஊழல் அமைச்சர்களை நீக்குவது குறித்து பிரதமருடன் பேச எதிர்க்கட்சிகள் திட்டம்

ஊழல் வழக்கில் சிக்கியுள்ள அமைச்சர் லல்லு உள்ளிட்ட ஆறு பேரை மத்திய அமைச்சரவையிலிருந்து நீக்க வலியுறுத்தி பிரதமர் மன்மோகன் சிங்கிடம் மனு அளிக்க தேசிய சனநாயகக் கூட்டணித் தலைவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

இத்தகவலை பா.ஜ.க. செய்தித் தொடர்பாளரும், மாநிலங்களவை எம்.பி.யுமான காஷ்மா ஸ்வராஜ் நிருபர்களிடம் ஜலந்தரில் சனிக்கிழமை தெரிவித்தார்.

ஊழல் புகாருக்கான ஆறு பேர் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ளனர். அவர்களை காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் அரசிலிருந்து நீக்க வேண்டும் என்று தேசிய சனநாயக கூட்டணி வலியுறுத்தி வருகிறது. ஆனால் இந்தக் கோரிக்கையை பிரதமர் மன்மோகன் சிங் நிராகரித்து விட்டார்.

எனினும் இந்த பிரச்சினை தொடர்ந்து வலுப்பெற்று வருகின்றது. நாடாளுமன்றத்தில் இந்த பிரச்சினையால் அதன் முதலாவது கூட்டத்தொடர் முடங் கியது. பட்ஜெட் கூட்டத்தொடரின் முதல் நாளிலும் அமளி காரணமாக முடங்கியது லல்லு பிரசாத் யாதவ் தாக்கல் செய்த பட்ஜெட்டை எதிர்க்கட்சிகள் புறக்கணித்தன. பலத்த முயற்சிக்குப் பிறகு பாராளுமன்றத்தை முடக்கும் போராட்டத்தைக் கைவிடுவதாக பா.ஜ.க அறிவித்தது. அதன் பின்னர் பொது பட்ஜட் தாக்கலின் போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வந்தனர். எனினும் ஊழல் மற்றும் கிரிமினல் பின்னணியில் கொண்ட அமைச்சர் களைப்புறக்கணிப்பது என்று பா.ஜ.க முடிவு செய்துள்ளது. இந்நிலையில் இந்த அமைச்சர்கள் பிரச்சினை குறித்து விவாதிக்க பிரதமரிடம் ஏற்கனவே நேரம் கேட்கப்பட்டுள்ளது. அடுத்த இரு தினங்களில் தேசிய சனநாயகக் கூட்டணியின் உயர்நிலைக் குழு பிரதமரைச் சந்தித்து மனு கொடுக்க உள்ளது. ஊழல் மற்றும் கிரிமினல் பின்னணி கொண்டவர்களை அமைச்சரவையிலிருந்து உடனடியாக நீக்கவேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி ஏற்கனவே குடியரசுத்தலைவரிடம் தேசிய சனநாயகக் கூட்டணி மனு கொடுத்துள்ளது. அதே போல பிரதமரிடமும் மனுகொடுக்கப்பட உள்ளது என்றார் ஸ்வராஜ்.

# மக்கள் தொகை வளர்ச்சி குறை தமிழகத்திற்கு இரண்டாம் இடம்

## -முதலமைச்சர் கூறுகின்றார்

(சென்னை)

தமிழகத்தில் பிறப்பு விகிதம் ஆயிரத்திற்கு 15 எனும் நிலையை உருவாக்குவோம் என்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா நேற்றுக் கூறியுள்ளார்.

2007ஆம் ஆண்டிற்குள் இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெற்றுக் கொள்ளும் தம்பதியினர் தமிழகத்தில் இல்லை எனும் நிலையை ஏற்படுத்துவோம் என்றும் தெரிவித்துள்ள அவர். இந்தியாவிலேயே கேரளாவுக்கு அடுத்தபடியாக தமிழகத்தில் தான் மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் குறைவாகவுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

# 2035இல் மக்கள் தொகையில் இந்தியா முதலிடத்தைப் பிடிக்கும்

(புதுடில்லி)

2035 ஆம் ஆண்டில் இந்தியா 146 கோடி மக்கள் தொகையுடன் சீனாவை பின்னுக்குத்தள்ளி முதலிடத்தைப் பிடிக்கும் என்று ஐ.நா ஆய்வறிக்கை தெரிவித்துள்ளது.

இந்தத் தகவலை இந்திய உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டேல் நேற்று கருத்தரங்கில் கூறியுள்ளார்.

ஆனால் கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், இமாச்சாலயா பிரதேசம், மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் மக்கள் தொகை அதிகரிப்பு வீதம் கணிசமான அளவுக்கு குறைந்துள்ளது என்று கூறியஅவர் இதனால் ஐ.நா சபையின் ஊடாக தொகை குறித்த ஆய்வறிக்கை தமக்கு மிகுந்த கவலையளிக்கின்றது என்றும் கூறியுள்ளார்.

# கட்டாய மதமாற்ற தடைச் சட்டத்தை மீண்டும் அமுல்படுத்த வேண்டும் இல.கணேசன்

கட்டாயமதமாற்றத் தடைச்சட்டத்தை மீண்டும் அமுல்படுத்த வேண்டும் என பாரதிய ஜனதா கட்சியின் அகில இந்திய செயலர் இல.கணேசன் வலியுறுத்தியுள்ளார். ஈரோட்டில் அவர் வெள்ளிக்கிழமை அளித்த பேட்டியில் அ.தி.மு.கவுடன் உள்ள கூட்டணி தேர்தல் நேரத்தில் மட்டுமே பொருந்தும். மக்களவைத் தேர்தலுக்கு பிறகு தமிழக அரசு பல்வேறு சலுகைகளை அறிவித்துள்ளது. இதை தேர்தலுக்கு முன்பே செய்திருக்கலாம். கட்டாய மதமாற்ற தடைச்சட்டத்தை வாபஸ் பெற்றதை பா.ஜ.க. வன்மையாகக் கண்டிக்கிறது மதமாற்றம் என்பது ஆன்மிக ரீதியில் நடைபெறாமல் வியாபார ரீதியில் நடைபெறுகிறது. கட்டாய மதமாற்றம் செய்வதை எந்தத் தெய்வங்களும் மன்னிக்காது. மதமாற்ற தடைச்சட்டத்தை மீண்டும் அமுல்படுத்த வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

# பா.ஜ.கட்சியைப் போலவே காங்கிரசும் அமெ.வுடன் உறவை மேம்படுத்தும்

## அமெ.பாதுகாப்புத்துறை அமைச்சர் நம்பிக்கை

இந்தியாவின் புதிய அரசு முன்னைய பாரதிய ஜனதாக் கட்சி தலைமையிலான அரசைப் போலவே அமெரிக்காவுடனான உறவுகளைத் தீவிரப்படுத்துவதில் கடைப்பாட்டுடன் இருப்பதாகத் தோன்றுகின்றது என்று அமெரிக்காவின் பாது காப்புத் துறையமைச்சர் கூறியுள்ளார்.அண்மைய ஆண்டுகளில் தொடக்கப்பட்ட பணிகளை மேலும் விரிவு படுத்தி அதில் முன்னேற்றம் காண அமெரிக்கா விரும்புகின்ற தெனவும் அவர் கூறியுள்ளார். எதுடன் இந்திய, பாகிஸ்தான் பேச்சு வார்த்தைகள் மூலம் காஷ்மீர் மற்றும் இதர பிரதேசங்களில் நிலவும் பதற்றங்களுக்கும் தீர்வுகாண முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


**வவுனியாவில் இயங்கிவரும் கணக்காய்வு நிறுவனம் அதன் கிளிநொச்சிக்கிளைக்கு கணக்காய்வு பயிலுநர்களைச் சேர்ப்பதற்கான**

## விண்ணப்பம் கோரல்

**கீழ்க்குறிப்பிடப்படும் தகைமையுடையவர்களிடமிருந்து மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

*.கல்வித்தகைமை

1.க.பொ.த.(உ/த)வர்த்தகத்துறையில்சித்தி அடைந்திருத்தல் அத்துடன்

2.கூட்டுறவு உயர்தரம் சித்தி.

* கிளிநொச்சியில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்

* அகவை 30இற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்

விண்ணப்பங்கள் யாவும் சுயவிபரங்கள் கொண்டதாகத் தயாரிக்கப்பட்டு. கீழ்க்காணப்படும் முகவரிக்கு 22.07.2004இல,அல்லது அதற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

**நேர்முகத்தேர்விற்கான திகதி தகுதியானவர்களுக்கு மட்டும் பின்னர் அறிவிக்கப்படும்.**

பத்திரா அன் கோ,
கிருஸ்ணன் கோயிலடி,
இரத்தினபுரம்,
கிளிநொச்சி.

(4793)

# முன்னணி ஓட்டப்பந்தய வீராங்கனை மரியன்ஜோன்ஸ் ஒலிம்பிக்கில் 100 மீற்றரில் பங்கேற்கும் வாய்ப்பை இழந்தார்




உலகின் முன்னணி ஓட்டப் பந்தய வீராங் கனையான அமெரிக் காவின் மரியன் ஜோன்ஸ் ஒலிம்பிக் 100 மீற்றர் பிரிவில் பங்கேற்பதற்கான தகுதிச் சுற்றுப்போட்டியில் தோல்வி அடைந்துள்ளார்.

இதனால் அவர் ஒலிம்பிக்கில் 100 மீற்றர் பிரிவுக்கான போட்டி யில் பங்கேற்கும் வாய்ப்பை இழந்துள்ளார்.

அடுத்த மாதம் எதென்சில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியில் ஓட்டப்பந்தய பிரி வில் அமெரிக்கா சார்பில் பங்கேற்பதற்கான தகுதிச் சுற்றுப்போட்டி கலிபோர்னியாவில் நடைபெற்றன.

இதில் 100 மீற்றர் பிரிவில் பஙகேற்பதற்கு நடைபெற்ற போட்டியில் அமெரிக்காவின் முன்னணி ஓட்ட வீராங்கனையும் சிட்னி ஒலிம்பிக்கில் மூன்று தங்கப்பதக்கங்களை வென்றவருமான மரியன் ஜோன்ஸ் பங்கேற்றார்.

ஆனால் இப்போட்டியில் மரியன் ஜோன்ஸ் 11.14 வினாடிகளில் பந்தயத் துாரத்தைக்கடந்து ஐந்தாவதாக வந்ததால் ஒலிம்பிக்போட்டியில் பங் கேற்கும் வாய்ப்பை இழந்தார். அண்மையில் ஊக்க மருந்து உட்கொண்டதாக சர்ச்சையில் சிக்கிய மரியன் ஜோன்ஸ் ஒலிம்பிக் தகுதி சுற்றுப் போட்டியிலும் தோல்வி அடைந்து வெளியேறியது அவரின் ரசிகர்கள் மத்தியில் சோகத்தை ஏற்படுத் தியுள்ளது.


# ஒலிம்பிக் போட்டிக்கான இந்திய அணியில் 74 வீர. வீராங்கனைகள் பங்கேற்பு

கிரீஸில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிக்காக இந்திய அணிக்கு 74 வீரர்களும் வீராங்கனைகளும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

உலகின் மிகப்பெரிய விளையாட்டுத் திருவிழாவான ஒலிம்பிக் போட்டிகள் கிரீஸ் தலைநகர் எதென்சில் அடுத்தமாதம் நடைபெறவுள்ளன.

இதில் பங்கேற்பதற்கான இந்திய அணி நேற்று கடந்தவெள்ளியன்று அறிவிக்கப்பட்டது.

இதில் ஹொக்கி அணிக்கான 16 பேரும் அடங்குவர். அதுமட்டுமன்றி தடகள பிரிவில் 20 பேர், வில்வித்தையில் ஆறுபேர், மல்யுத்த வீரர்கள் 7 பேர் மற்றும் டென்னிஸ், நீச்சல்,படகுப்போட்டி ஆகிய பிரிவுகளிலும் இந்திய அணியினர் போட்டிகளில் பங்கேற்கவுள்ளனர்.



க்ஸ்ராட்டில் நேற்று நடந்த சுவிஸ் ஒப்பன் இறுதிப போட்டியில் ரஷ்யாவின் இகோர் அன்ட்ரீயைத் தோற்கடித்த முன்னணி டெனிஸ் வீரர் றோஜர் பெடரர் தனது வெற்றிக் கிண்ணத்தை உயர்த்திக் காட்டுக்கிறார்.

## இளையோருக்கான கால்பந்துப்போட்டி

கிளிநொச்சி மாவட்ட கனிஸ்ட பிரிவு கால்ப்பந்து அணிகள் கலந்து கொள்ளும் சுற்றுப் போட்டி இன்று கிளி.பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகிறது.

இன்றைய போட்டியில் கிளிநொச்சி.ம.வியை எதிர்த்து இராமநாதபுரம் ம.வியும், வட்டக்கச்சி ம.வியை எதிர்த்து உருத்திரபுரம் ம.வி அணிகளும் மோதவுள்ளன.

போட்டிகள் மாலை 2.30 மணிக்கு ஆரம்பமாகின்றது.






அவுஸ் திரேலியாவின் பாபராஸ்கெற் அமெரிக்காவின் சண்டருபின்னுக்கு திருப்புகிறார். ஞாயிறு அவுஸ்திரேலியாவின் இன்ஸ்பார்க்கில் நடந்த 3ஆவது போட்டியில் இது நடந்தது. இப்போட்டியில் ஸ்கோர் 6:3,6:2 என்ற அடிப்படையில் வென்றார்.

-நட்வேட்ஸ் கிண்ண இறுதிப்போட்டி-

## மேற்கிந்தியத்தீவை இலகுவாகத்தோற்கடித்த நியூசிலாந்து அணி கிண்ணத்தை சுவீகரித்தது

இங்கிலாந்தில் நடைபெற்று வந்த நட்வேட்ஸ் கிண்ணத்துக் கான இறுதிப்போட்டியில் நியூ சிலாந்து அணி 107 ஓட்டங்களால் இலுகுவான வெற்றியைப்பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 49.2 ஓவர் களில் 266 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் பிளெமிங் 67,நதன் அஸ்டல் 57, மார்சல் 44, மக்மிலன் 52 ஓட்டங்களை முறையே அதிகபட்டசமாகப் பெற் றனர். 18 ஓட்டங்கள் உதிரிகளாகப் பெறப்பட்டன. பந்துவீச்சில் ராம் நரேஷ் சர்வான் மூன்று விக்கெட் டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு வெற்றி இலக்கை நோக்கி ஆடிய மேற்கிந்தியத் தீவு 159 ஓட்டங்களைபெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்து 107 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது.

துடுப்பாட்டத்தில் ஸ்மித் 43, அணித்தலைவர் லாறா40 ஓட்டங் களை முறையே அதிகபட்சமாகப் பெற்றனர்.

மிகச்சிறப்பாகப் பந்துவீசிய டானியல் விக்டோரி 30 ஓட்டங் களைக் கொடுத்து ஐந்துவிக்கெட் டுக்களைக் கைப்பற்றினார்.

# அணியில் மீண்டும் இணைவதற்கு பிரெட்லீ போராட வேண்டியிருக்கும்

## அலன் போடர்



பிரெட்லீ

காயங்காரணமாக நீண்ட ஓய்விலிருந்து குணமா கியுள்ள அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் மற்றும் ஒரு வேகப்பந்து வீச்சாளரான பிரெட்லீ எதிர்வரும் அக்டோபரில் இந்தியாவுடன் நடை பெறவுள்ள போட்டித்தொடரில் பங்கேற்கும் அணியில் இணையும் பொருட்டு தனது உடல் தகுதியை உறுதிப்படுத்த இங்கிலாந்து கவுண்டி அணிகளுடனான போட்டிகளில் பங்கேற்கவிருக்கிறார்.

இந்தத் தகவலை அவரது முகாமையா ளரான நீல்மெக்ஸ்வெல் தெரிவித் துள்ளார்.


இதற்காக அவர் முன்னாள் அவுஸ்திரேலிய பந்து வீச்சா ளரான டெனிஸ் லில்லி யிடம் 10 நாட்கள் பயிற்சி பெறுவார். அவருடைய முழுக்கவனமும் இந்தியாவுடனான போட்டிகளில் பங்குகொள்வதே என மெக்ஸ் வெல் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவுஸ்திரேலிய அணியின் தேர்வாளரான அலன்போடர் கூறியிருப்பதாவது, பிரெட்லி அணியில் இணைவதற்கு போராடவேண்டியிருக்கும் எனவும் அவரை சேர்ப்பதனால் மற்றொரு திறமையான வீரரான கஸ்பரோவிச்சை நீக்க வேண்டியேற்படலாம் என்றும் தெரிவித்துள்ளார். எனினும் அவரது முகாமையாளரான மெக்ஸ்வெல் தெரிவிக்கும் போது லீ இங்கிலாந்து கவுண்டி அணியில் சேர முடிவாகவில்லை எனவும் ஆலோசிக்கப்பட்டுவருவதாகவும் தெரிவித்துள்ளார். தற்போது சிறிலங்காவுக்கெதிரான 1ஆவது டெஸ்ட் போட்டியில்(7/39) திறமையாக ஆடிவரும் கஸ்பரோவிச் அணியிலிருந்து நீக்கப்பட்டு லீ அணியில் சேர்க்கப்படுவது மிகவும் சிரமமான காரியமாகும் எனவும் பிரெட்லி இதனால் நித்திரையின்றி யோசித்துக் கொண்டிருப்பதாக முகாமையாளர் மெகஸ்வெல் தெரிவித்துள்ளார்

# மாவன் அத்தப்பத்தின் சதத்தின் உதவியுடன் சிறிலங்கா அணி வலுவான நிலையில்

அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக கெயின்ஸில் நடைபெற்று வரும் இரண்டாவதும் இறுதியு மான டெஸ்ட் கிரிக்கெட் போட்டி யில் சிறிலங்கா அணி வலுவான நிலையை எட்டியுள்ளது.

போட்டியின் மூன்றாம் நாளான




நேற்றைய ஆட்ட நேரமுடிவின் போது சிறிலங்கா அணி அதன் முதல் இனிங்சிற்காக 5 விக் கெட்டுக்களை இழந்து 417 ஓட் டங்களைப் பெற்றுள்ளது.

அவுஸ்திரேலிய அணி முதல் இனிங்சில் அனைத்து விக்கெட்டுக் களையும் இழந்து 517 ஓட்டங் களைப் பெற்ற நிலையில் சிறி லங்கா அணி 106 ஓட்டங்கள் பின்னிலையில் உள்ளது.

2விக்கெட்டுக்களை இழந்து 184 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சிறிலங்கா அணி நேற்று தனது முதல் இனிங்சை தொடர்ந் தது. இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவின் போது ஆட்டமிழக்காது 75 ஓட்டங்களையும் ஒன்பது ஓட்டங்களையும் பெற்றிருந்த அணித் தலைவர் அத்தப்பத்து உபதலைவர் ஜெயவர்த்தனவும் நேற்று சிறப்பாகத் துடுப்பெ டுத்தாடினர் அத்தப்பத்து. டெஸ்ட் வாழ்வில் 15 ஆவது சதத்தைப் பூர்த்தி செய்ததுடன் மூன்றாவது விக் கெட்டுக்காக ஜெயவர்த் தனவுடன் இணைந்து 124 ஓட்டங் களைப் பெற்றநிலையில் 133 ஓட்டங் களுடன் ஆட்டமிழந்தார். அதனைத் தொடர்ந்து ஜெயவர்த்தன 43 ஓட்டங்களைப் பெற்று ஆட்ட மிழந்தார்.

இதனையடுத்து ஐந்தாவது விக்கெட்டுக்காக திலகரட்ண டில் சான், திலான் சமரவீரவுடன் இணைந்து 65 ஓட்டங்களைப் பெற்ற போது, 35 ஓட்டங்களுடன்



டில்சான் ஆட்டமிழந்தார்.

இதனையடுத்து சமரவீரவுடன் இணைந்து தனது அணியில் இடத்தை தக்கவைக்க போராடும் களுவிதாரண ஆட்டநேர முடிவு வரைஆட்ட மிழக்காது 30 ஓட்டங்களையும் , சமவீர 53 ஓட்டங்களையும் பெற்றி ருந்தனர்.

பந்து வீச்சில் ஷேன் வோர்ன் இரண்டு விக்கெட்டுக்களையும், கிளெஸ்பி, கஸ்பரோவிச், மெக்ரா ஆகியோர் தலா ஒவ்வொரு விக் கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

# கோபா அமெரிக்கக்கிண்ண கால்பந்துப்போட்டி; ஆர்ஜன்டீனா அணிக்கு அதிர்ச்சித்தோல்வி



கோபா அமெரிக்கக் கிண்ணத்துக்கான கால்பந்துப் போட்டிகள் அமெரிக்காவில் நடைபெற்று வருகின்றன.

வடஅமெரிக்கா, தென்னமெரிக்கா கண்டங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் நாடுகளின் அணிகள் கலந்து கொள்ளும் இப்போட்டியில் நேற்று இருமுக்கியமான இரு போட்டிகள் நடைபெற்றன.

உருகுவே ஈக்வடோர் அணிகளுக்கிடையில் நடைபெற்ற போட்டியில் உருகுவே அணி 2-1 என்ற கோல் எண்ணிக்கையில் வெற்றிபெற்றது.

இதன் மூலம் குழு 3 இல் உருகுவே அணி ஸ்திரமான நிலை ஒன்றைப் பெற்றுள்ளது. இரண்டு போட்டிகளில் விளையாடி ஒன்றில் வெற்றி மற்றையதைச் சமப்படுத்தியுள்ளது.

ஆர்ஜன்டீனா, மெக்சிக்கோ அணிகளுக்கிடையில் நடைபெற்ற போட்டியில் ஆர்ஜன்டீனா மிகஇலகுவில் வெற்றிபெறும் என அனைவரும் எதிர்பார்த்த போதும் மெக்சிக்கோ 1-0என்ற கோல் எண்ணிக்கையில் ஆர்ஜன்டீனா அணியைத் தோற்கடித்துள்ளது.


# அடுத்து வரும் உலகக் கிண்ணப் போட்டியில் இந்தியா கிண்ணத்தைக் கைப்பற்றலாம்

## -அர்ஜுன ரணதுங்க

இந்தியாவும், அவுஸ்தி ரேலியாவும் ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் சமபலத்துடன் இருப்பதால் 2007ஆம் ஆண்டு நடைபெறும் உலகக் கிண்ணப் போட்டியில் இந்தியா கிண்ணத் தைக் கைப்பற்றலாமென சிறி லங்கா கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார். இந்தியாவில் பத்திரிகையாளருக்கு அளித்த பேட்டியில் அவர் தெரிவித்ததாவது.

இந்தியா தொடர்ந்து தற்போதைய வீரர்களை அணியில் தக்கவைத்தால் அதனை வீழ்த்து வது கடினம் என்று கூறியுள்ள அவர் முன்னணி வீரர்களான சிறிலங்காவில் சமிந்தவாஸ் போன்று இந்திய அணியின் அனில்கும்ளே அடுத்த உலகக் கிண்ணம் வரை ஓய்வு பெறா திருக்க வேண்டுமென்றார்.

### சிந்தனைக்கு



வன்முறையை மென்முறையால் வெற்றி கொள்ள முடியாது என்பதை உணர்ந்து கொண்டதால் தான், நாம் வன்முறைப் போராட்டத்தைத் தழுவிக் கொண்டோம்.

தமிழீழதேசியத்தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 12-07-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல்
Daily@eezhanatham.com
natham23ela@yahoo.com

# மக்களின் சலிப்பு !

சிறிலங்காவில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மாகாண சபைக்கான தேர்தலில் வாக்குப்பதிவு பெருமளவில் வீழ்ச்சி கண்டுள்ளதாகவும், இலங்கையின் தேர்தல் வரலாற்றில் மிகக்குறைந்தளவான வாக்களிப்பு வீதத்தில் இதுவும் ஒன்றெனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆனால் இதில் ஆச்சரியப்படவோ அன்றி அதிர்ச்சி அடையவோ எதுவுமே இல்லை. இது எதிர்பார்க்கத்தக்கதே. ஏனெனில் தேர்தல்கள் மூலம் தமது பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது. அரசியல்வாதிகள் தீர்வுகாணமாட்டார்கள் என மக்கள் உணரத் தலைப்பட்டுள்ளதான வெளிப்பாடே இதுவாகும்.

மாகாணசபைக்கான தேர்தல்கள் அர்த்தமற்றவை என தேர்தல்களுக்குப் பொறுப்பாக உள்ள தேர்தல் ஆணையாளரே கருத்துத் தெரிவிக்கும் நிலையில் உள்ளபோது மக்கள் தேர்தலில் எவ்வாறு பங்கு பற்றுவார்கள் என எதிர்பார்க்கமுடியும்?

சிறிலங்காவைப்பொறுத்து மக்களுக்குத் தேர்தலில் அதிருப்தி/சலிப்பு ஏற்படுவதற்கு இரண்டு பிரதான காரணிகள் உண்டு. ஒன்று அடிக்கடி வரும் தேர்தல்கள், இரண்டு தேர்தல்களில் தாம் வாக்களிப்பதனால் எதுவுமே நடந்துவிடப்போவதில்லை என்ற மக்களின் தீர்மானம்.

சிறிலங்காவில் 1999ஆம் ஆண்டுக்குப் பிறகு ஒரு சனாதிபதித்தேர்தல் மூன்று பாராளுமன்றத் தேர்தல், இரண்டு மாகாணசபைத் தேர்தல் என தேர்தல்கள் நடந்துள்ளன. குறைந்தது வருடத்திற்கு ஒருதேர்தல் என்றாகிவிட்டது. இரண்டு தேர்தல்கள் நடைபெற்றவருடங்களும் உண்டு. இவ்வாண்டு இதற்கு எடுத்துக்காட்டாகும்

இந்நிலையில் தேர்தல்களில் கலந்து கொள்வது வாக்களிப்பது என்பது ஒரு வேலைப்பளு என்பது போன்று மக்களுக்கு ஆகிவிட்டது. ஆகையினால் தேர்தலுக்காக நேரம் ஒதுக்கவோ, அதற்காக தமது பிற பணிகளை ஓரம் தள்ளவோ மக்கள் இன்று தயாராக இல்லை.

அடுத்ததாக தேர்தல்களில் தமக்கு எந்தவித நன்மையுமில்லை, நாட்டிற்கும் எந்தவித பயனுமில்லை என்பதே இன்று மக்களின் உணர்வாகவுள்ளது. அதாவது அரசியற்கட்சிகளின் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான ஒரு போட்டிக்களமாக மட்டுமே தேர்தல் உள்ளது. வேறு விதமாகக் கூறுவதானால் அரசியல்வாதிகளின் அதிகாரம், பலம் என்பவற்றிற்கான போட்டிக்களமாகவே தேர்தல் உள்ளதே ஒழிய மக்களின் தேவைகள், உணர்வுகளுக்குத் தேர்தலில் வாக்களிப்பதன் மூலம் தீர்வு எதுவும் கிட்டிவிடும் என்பதற்கில்லை.

கடந்த தேர்தலின் போதே மிகவும் குறைந்தளவிலான வாக்குகளே பதிவாகும் என ஆரம்பத்தில் எதிர்வு கூறப்பட்டாதாயினும்- தேர்தலில் மிக உயர்ந்தளவில் வாக்குப்பதிவு இடம் பெற்றது! இவ்வாறான மக்களின் மனமாற்றத்திற்குக் காரணம் தம்மால் வழங்கப்படும் ஆணையின் படி புதிய அரசாங்கம் ஒன்று உருவாக்கப்படும் என்பதும்,அது தமது பிரச்சினைகளுக்குத் தீர்வைக் கொண்டுவரும் என்ற நம்பிக்கையுமே ஆகும்.

ஆனால் தேர்தல் முடிவுகள் மக்களின் எதிர்பார்க்கை எதையும் நிறைவு செய்யவில்லை. தேர்தல் முடிவு ஒரு ஸ்திரமான அரசாங்கத்தைத் தோற்றுவிக்க உதவாதது மட்டுமல்ல, மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவு செய்யத்தக்கதாகவும் புதிய அரசாங்கம் இருக்கவில்லை. அதாவது மக்கள் எதிர்பார்த்த மாற்றமோ திருப்பமோ ஏற்படவில்லை.

மாறாக, நாட்டில் நிலவிய சமாதானச் சூழ்நிலை குறித்த அச்சமே மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. அது மட்டுமல்ல நாட்டின் பொருளாதார நிலை மேலும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதோடு அரசாங்கம் வாக்களித்தது போன்று பிரச்சினை எதற்கும் அதனால் தீர்வைக்காண முடியவில்லை.

அதுமட்டுமல்ல, நாட்டில் ஸ்திரமான அரசு இல்லாததினால் ஒரு அவலநிலையே ஏற்பட்டுள்ளது. ஆளும்கட்சி பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கு அச்சப்படும் நிலையே தோன்றியுள்ளது. அது மட்டுமின்றி அரசியல் கலாசாரம் பெரும் சீரழிவிற்கு உள்ளாகி பாராளுமன்றமும் வன்முறைக்களமாகியுள்ளது. இந்நிலை மக்களுக்குத் தேர்தலிலும், அரசியற் கட்சிகள் மீதும் அவநம்பிக்கையைத் தோற்றுவித்துள்ளது. அரசியல் வாதிகள் தேர்தலின் போது தம்மைப் பகடைக்காய்களாக்குவதைப் புரிந்து கொள்ள முடிந்துள்ளது. இதன்விளைவே மக்கள் தேர்தலில் இருந்து விலகிக்கொள்ளக் காரணமாகியுள்ளது. இது சனநாயகத்தின் மீது மக்கள் கொண்டுள்ள வெறுப்பாக கொள்ளத்தக்கதல்ல. அரசியல் கட்சிகள் மீதும், அரசியல் வாதிகள்மீதும் மக்கள் கொண்டுள்ள அதிருப்தியின் வெளிப்பாடே ஆகும். இந்தவகையில் மாகாணசபைத் தேர்தலில் அதிருப்தி அரசியல் மாற்றம் ஏற்பட்டது போனால் இந்நிலை இனிப்பொதுத்தேர்தல், சனாதிபதித்தேர்தல் என நீடிப்பதற்கும் வாய்ப்புக்கள் உண்டு.

# அரசாங்கம் விடுத்தவேண்டுகோள் தேர்தலின் போது மக்களால் நிராகரிப்பு

## ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தலிலும் பார்க்க தமக்கு பலம்மிக்க ஆணையொன்றை வழங்குமாறு கூட்டமைப்பு அரசாங்கம் விடுத்த வேண்டுகோளை மக்கள் நிராகரித்துள்ளரென ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

நடந்து முடிந்த மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் இதனை உணர்த்துவதாக அந்தக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய ஏனைய அரசியற் கட்சிகள் நடவடிக்கை எடுத்த போதும் கூட்டமைப்பு அரசாங்கம் இதனை இரண்டாவது பொதுத் தேர்தலாக கருதி செயற்பட்டதென ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

பொதுத் தேர்தலை விட மாகாண சபைத்தேர்தலின் மூலம் தமக்கு கூடுதல் பலத்தை வழங்குமாறு கூட்டமைப்பு அரசாங்கம் கோரியிருந்தது எனினும் பொதுத் தேர்தலில் அவர்களுக்கு கிடைத்த மொத்த வாக்குகள் மாகாண சபைத் தேர்தலில் கிடைக்கவில்லை என ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக் காட்டியுள்ளது.

இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த பின்னர் நடைபெற்ற தேர்தல்களில் இம்முறை நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலிலேயே மிகக் குறைந்த வாக்குகள் பதிவாகியுள்ளதாகவும் ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

சனாதிபதியினதும் மக்கள் விடுதலை முன்னணியினதும் வாக்குறுதி அரசியல் காரணமாக சர்வஜன வாக்களிப்பில் இருந்து மக்கள் விலகிச் செல்லும்நிலை தோன்றியுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

-தேர்தல் முறையை மாற்றி அமைக்கும்-

# பாராளுமன்றத் தெரிவுக் குழுவை மீண்டும் செயற்படவைக்க முடிவு

சிறிலங்காவின் தேர்தல் முறையை மாற்றி அமைக்கும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவை இவ்வருட இறுதிக்குள் மீண்டும் இயங்க வைக்க அதன் தலைவர் தினேஸ் குணவர்த்தனாவுக்கு அழைப்பு விடப்போவதாக சனாதிபதி செயலகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

கடந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசால் 19 பாராளுமன்ற அங்கத்தவர்கள் அடங்கிய இக்குழு நியமனம் செய்யப் பெற்றிருந்தது. இவ்வருடம் பெப்ரவரி மாதம் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதும் இக்குழு செயற்படவில்லை. ஆகவே மீண்டும் புதியஅரசு இயங்க வைப்பதற்கு ஆயத்தங்களை மேற்கொண்டுள்ளது.

# கொள்ளுப்பிட்டி குண்டு வெடிப்பு தனிப்பட்ட ஒரு அசம்பாவிதம்

## ஐ.தே. முன்னணி தெரிவிப்பு

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டி குண்டு வெடிப்பு தனிப்பட்ட ஒரு அசம்பாவிதம் எனவும் அதனைக் காரணம் கூறாமல் அரசு சமாதானப் பேச்சுக்களை விரைவில் முன்னெடுக்க வேண்டும் என்றும் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே. முன்னணி தெரிவித்திருக்கின்றது.

சமாதான முயற்சிகளில் காட்டப்படும் அசமந்தப் போக்கு ஒஸ்லோ மாநாட்டில் செய்து கொள்ளப்பட்ட சமாதான உடன் படிக்கையை பாதிப்பிற்குள்ளாக்கும் என அக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் ரவிந்திர ரந்தெனிய தெரிவிக்கிறார்.

இது தொடர்பாக ஐ.ம.சு முன்னணியின் தேசியப்பட்டியல் எம்பியுடன் பிரதிப்பாதுகாப்பு அமைச்சருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்க கூறுகையில் சமாதானத்துக்கு இச்சம்பவம் தடையாகாது என்றும் எதிர்க்கட்சியினர் கூறுவது போன்று பாதுகாப்பு அமைச்சை சனாதிபதி பொறுப்பேற்றதால் ஏற்பட்ட விளைவு என்று கூற முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

# சனாதிபதியிடம் அதிக பாதுகாப்பு கோருகின்றார் டக்ளஸ் தேவானந்தா

(கொழும்பு)

ஈ.பி.டி.பி தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தனது பாதுகாப்பைப் பலப்படுத்துமாறு சனாதிபதியிடம் கேட்டுள்ளார். கடந்த புதன்கிழமை தனக்கு எதிராக மேற்கோள்ளப்பட்ட கொலைமுயற்சி தோல்வியடைந்ததையடுத்து மீண்டும் தமிழீழ விடுதலைப்புலிகள் தன்னைக் குறிவைக்கக் கூடும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். ஆங்கிலவார இதழுக்கு அளித்த செவ்வியில் கருத்து வெளியிட்டுள்ள அவர், தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து வெளியேற்றப்பட்ட கருணாவுடன் தான் தொடர்பு வைத்திருப்பதன் காரணமாக பாதுகாப்பாக இருக்குமாறு சனாதிபதியும் தனக்கு ஆலோசனை கூறியதாக தெரிவித்துள்ளார். இதேவேளை தனது அமைச்சிற்கு கூடிய பாதுகாப்பு வழங்குமாறு பாதுகாப்பு தரப்பினரிடம் ஏற்கனவே விடுக்கப்பட்ட கோரிக்கை உதாசீனப் படுத்தப்பட்டதாக சுட்டிக் காட்டியுள்ளார். இதனால் சனாதிபதியை இவ்விடயத்தில் நேரடியாக தலையிடுமாறு தான் கோரியுள்ளதாகவும் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். (32)

# இந்திய உதவியுடன் விவசாய பீடம்

இந்தியாவின் நிதி உதவியுடன் தென் கிழக்கு பல்கலைக்கழகத்தில் விவசாய பீடம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

அடுத்த கல்வியாண்டிலிருந்து இந்த விவசாய பீடம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கிழக்கு உட்கட்டமைப்பு பிரதியமைச்சர் தெரிவித்துள்ளார். இந்திய அரசினால் வழங்கப்படும் 29 கோடி ரூபா நிதியுதவியுடனேயே இந்த விவசாய பீடம் அமைக்கப்படவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# மாகாண சபைகளிலோ அதற்கான தேர்தல்களிலோ அர்த்தமில்லை

## -ஜாதிக ஹெல உறுமய தெரிவிப்பு

மாகாண சபைகளிலோ அல்லது அதற்காக நடைபெறும் தேர்தல்களிலோ எவ்வித அர்த்தமும் இல்லை என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலை ஜாதிக ஹெல உறுமய கட்சி ரீதியாக புறக்கணித்திருந்தது. மாகாண சபையானது வடக்கு கிழக்குப் பிரச்சனையைத் தீர்வுக்குக் கொண்டு வரவே அமைக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ள ஜாதிக ஹெல உறுமய, தற்போது வடக்கு கிழக்கில் மாகாணசபை இயங்காத போதிலும் நாட்டின் ஏனைய பகுதிகளில் காரணமில்லாமல் இயங்குவதாக சுட்டிக்காட்டியுள்ளது. நேற்று முன்தினம் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலில் தமது கட்சி போட்டியிடவோ அல்லது வாக்களிக்கவோ இல்லை என கட்சியின் தலைவர் தெரிவித்துள்ளார்.

# லஞ்ச ஊழல் ஒழிப்பு சட்டமூலம் 20ஆம் திகதி பாராளுமன்றில் சமர்ப்பிப்பு

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பதவியேற்று மூன்று மாதங்கள் முடிந்த நிலையில் அதன் முதலாவது நடவடிக்கையாக வரும் 20ஆம் திகதி பாராளுமன்றத்தில் லஞ்சஊழல் ஒழிப்பு சட்டமூலத்தை சமர்ப்பிக்க விருப்பதாக அறிவித்துள்ளது.

இச்சட்ட மூலம் ஐ.நா கொள்கைகளுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் நாட்டின் சொத்துக்களைத் தேவையின்றி துஷ் பிரயோகம் செய்வது, நிதி மோசடி செய்தல், லஞ்சம் பெறல், கொடுத்தல், என்பவற்றில் ஈடுபடுவோரை கடுமையாகத் தண்டிக்க வழிகளை வழங்குகின்றது என்றும் அக்கட்சி வட்டாரங்கள் கூறுகின்றது.

# ஆறு மாகாணங்களுக்கான தேர்தல் முடிவுகள்!

வடமத்திய மாகாணத்தில்:-
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி- 20
ஐக்கிய தேசியக் கட்சி - 10
முஸ்லிம் காங்கிரஸ் - 01
மொத்தம் - 31

ஊவாமாகாணத்தில்:-
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி- 19
ஐக்கிய தேசியக் கட்சி - 12
மலையக மக்கள் முன்னணி - 01
மொத்தம் - 32

தென்மாகாணத்தில்:-
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி- 26
ஐக்கிய தேசியக் கட்சி - 15
மொத்தம் - 41

சப்பிரகமுவமாகாணத்தில்:-
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி- 26
ஐக்கிய தேசியக் கட்சி - 15
இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் - 01
மொத்தம் - 42

மேல்மாகாணத்தில்:-
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி- 57
ஐக்கிய தேசியக் கட்சி - 39
முஸ்லிம் காங்கிரஸ் - 04
மேல்மாகாண மக்கள் முன்னணி - 01
சனநாயக ஐக்கிய முன்னணி - 01
மொத்தம் - 102

மத்தியமாகாணத்தில்:-
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி- 28
ஐக்கிய தேசியக் கட்சி - 26
மலையக மக்கள் முன்னணி - 02
மொத்தம் - 56

## ஆனையிறவு....

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, மதியம் 1.40 மணியளவில் கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெறவுள்ள கலை நிகழ்வில் கலந்து கொள்வதற்காக உந்துருளியில் பயணித்த திருநகர் கிளிநொச்சியைச் சேர்ந்த தேவதாசன் உதயகுமார் (வயது 28), கந்தசாமி அசோக்குமார் ஆகிய இருவரும் ஆனையிறவுப் பகுதி வீதியில் ஏற்பட்ட இடர்பாடு காரணமாக உந்துருளி கட்டுப்பாட்டை இழந்து சரிந்த வேளை வீதியில் தூக்கி எறியப்பட்ட உதயகுமார் எதிரே வந்த பாரவூர்தியின் சில்லுக்குள் அகப்பட்டார். அப்போது இவரது வயிற்றுப் பகுதிக்கு மேலே பாரவூர்தியின் பின் சில் ஏறியதால் ஸ்தலத்திலேயே உயிரிழந்தார். இவருடன் சென்ற அசோக்குமார் சிறுகாயங் களுக்குள்ளாகி கிளிநொச்சி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். உயிரிழந்தவரின் உடல் திடீர் மரண விசாரணை அதிகாரியினால் ஸ்தலத்தில் வைத்தே பார்வையிடப்பட்டு பின் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட பின் உறவினர்கள் எடுத்துச்சென்றனர். இவர் யாழ்.பல்கலைக்கழக வர்த்தகபீட மாணவன் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச)

## புலிகள்...

போது என்பது குறித்து நாங்கள் இரண்டு தரப்பினருடனும் தொடர்பை ஏற்படுத்திய வண்ணமே இருக்கின்றோம்.நோர்வேயின் பங்கு அனுசரணையே இரண்டு தரப்பிற்கும் இடையே ஏற்பாட்டாளர் என்பது புரிய வைக்கப்படவேண்டும்.

எமது சிறப்புத் தூதர் எரிக்சூல்ஹெய்ம் கடந்த வாரம் இலங்கை சென்று இரண்டு தரப்பினரையும் சந்தித்தார். இதுமிகவும் பயனுள்ளதாக அமைந்தது. ஆனால் அது இன்னும் முடிவடையவில்லை என்று கூறியதுடன், கருணா விவகாரம் குறித்து கேட்கப்பட்டதற்கு "இந்த விடயம் உட்பட அனைத்து விடயங்கள் குறித்தும் கலந்துரையாடி தகவல்களை தரப்பிற்குமிடையே கொண்டு செல்கிறோம்." என்றார்.

இலங்கைப் பிரச்சினைக்கான அமைதிப் பேச்சு இந்தியாவின் பங்கு பற்றிக் கேட்கப்பட்டதற்கு இந்தியாவின் பங்கு மிகப் பெரியது அது எங்களுக்கு முக்கியமானது என்றார்.

இதேவேளை நோர்வேயின் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜான் பீற்றர்சன் அண்மையில் இந்தியாவின் புதிய காங்கிரஸ் அரசாங்கத்தின் வெளியுறவுத் துறை அமைச்சர் நட்வர் சிங் உட்பட்ட அமைச்சர்களையும்,பிரதமரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கே.என் திக்சீத் ஆகியோரைச் சந்தித்தார்.இதன்போது கருத்துரைத்த இந்திய அதிகாரிகள் இந்தியா ஒரு போதும்,தமது அண்டை நாட்டில் தமிழீழம் அமையப் போவதை அனுமதிக்காது.

அதேநேரம் இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வு ஒன்று குறித்து பேச்சுக்கள் நடைபெறும் போது அதற்குத் தாம் முழு ஆதரவைத் தருவதாகவும் இந்திய அதிகாரிகள் கூறியுள்ளதான இந்திய செய்திநிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த நோர்வே வெளியுறவுத்துறை அமைச்சரின் சந்திப்புத் தொடர்பாக கருத்துரைத்த இந்திய அதிகாரி ஒருவர், சில காரணங்களால் நோர்வேத் தரப்பினர் அனைத்து விடயங்களையும் இந்தியாவிடம் தெரிவிக்கவில்லை என்பது தெரியும் என கூறினார்.எனினும் 90 வீதம் திருப்திப்படக்கூடிய அளவில் இந்தியாவுக்குவாய்ப்பான வகை யில் அவர்கள் தற்போதைய சமாதான சூழ்நிலை சம்பந்தமாக விளக்கமளித்ததாக அந்தஅதிகாரி தெரிவித்தார். (32)

## ஆறு....

இந்த நிலையில் இலங்கையின் எட்டு மாகாணசபைகளில் செயலிழந்து காணப்படும் வடகிழக்கு மாகாண சபையைத் தவிர ஏனைய ஏழு மாகாண சபைகளும் சனாதிபதியின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கட்டுப்பாட்டுள் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. நேற்று இடம் பெற்ற இந்த ஆறு மாகாண சபைகளுக்கான தேர்தலில் மக்கள் ஆர்வம் இன்றிக் காணப்பட்டதாகவும் பொதுவாக 45 வீதமாகவும் கொழும்பில் 35 வீதமாகவும் வாக்களிப்பு வீதம் இருந்ததாகவும் புள்ளி விபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இந்த முடிவுகளின் படி தேர்தல் நடைபெற்ற 15 தேர்தல் மாவட்டங்களில் பதினான்கில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி பெற்றுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் மட்டும் ஐக்கிய தேசியக்கட்சி வெற்றி பெற்றுள்ளது.

கொழும்பு, களுத்துறை, கம்பஹா, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, மாத்தளை, கண்டி, ப்துளை, மொனராகலை, அநுராதபுரம், பொலநறுவை, கேகாலை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி பெற்றுள்ளது.

இதேவேளை மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இருபத்தொரு ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி பதினெட்டு ஆசனங்களையும் இதைத் தவிர மேல் மாகாண மக்கள் முன்னணி, சனநாயக ஐக்கிய முன்னணி ஆகியன தலா ஒரு ஆசனத்தையும் கைப்பற்றியுள்ளன.

கம்பஹா மாவட்டத்தில் பெறுபேறுகளின் அடிப்படையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு இருபத்தி நான்கு ஆசனங்கள் கிடைத்துள்ளன. ஐக்கிய தேசியக் கட்சி பதினான்கு ஆசனங்களைப் பெற்றுள்ளது. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசிற்கு ஒரு ஆசனம் கிடைத்துள்ளது.

களுத்துறை மாவட்டத்தில் ஐ.ம.சு.மு.க்கு 12 ஆசனங்களும் ஐ.தே.க.க்கு ஏழு ஆசனங்களும் சி.முஸ்.காங்கிரசிற்கு ஒரு ஆசனமும் கிடைத்துள்ளது.

காலி மாவட்டத்தில் ஐ.ம.சு.மு.க்கு 14 ஆசனங்களும், ஐ.தே.கட்சிக்கு ஒன்பது ஆசனங்களும், மாத்தறை மாவட்டத்தில் ஐ.ம.சு.மு.க்கு 12 ஆசனங்களும், ஐ.தே.கட்சிக்கு ஆறு ஆசனங்களும் கிடைத்துள்ளன.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஐ.ம.சு.மு.க்கு எட்டு ஆசனங்களும் ஐ.தே.கட்சிக்கு நான்கு ஆசனங்களும் கிடைத்துள்ளன.

மத்திய மாகாணம் கண்டி மாவட்டத்தில் ஐ.ம.சு. முன்னணி 16 ஆசனங்களையும் ஐ.தே.கட்சி 14 ஆசனங்களையும் கைப்பற்றியுள்ளன.

மாத்தளை மாவட்டத்தில் ஐ.ம.சு.மு. ஆறு ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் ஐ.தே.க எட்டு ஆசனங்களைப் பெற்று வெற்றியீட்டியுள்ளது. இங்கு ஐ.ம.சு.மு. ஆறு ஆசனங்களைக் கைப்பற்றியதுடன் மலையக மக்கள் முன்னணி இரண்டு ஆசனங்களை கைப்பற்றியுள்ளது.

ஊவா மாகாணம்- பதுளை மாவட்டத்தில் ஐ.ம.சு.மு. 12 ஆசனங்களையும் ஐ.தே.கட்சி எட்டு ஆசனங்களையும் மலையக மக்கள் முன்னணி ஒரு ஆசனத்தையும் கைப்பற்றின.

மொனராகல மாவட்டத்தில் ஐ.ம.சு.மு. ஏழு ஆசனங்களையும் ஐ.தே.க. 4 ஆசனங்களையும் கைப்பற்றியது.

வடமத்திய மாகாணம் அநுராதபுரம் மாவட்டத்தில் ஐ.ம.சு.மு. 14 ஆசனங்களையும் ஐ.தே.க. ஆறு ஆசனங்களையும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒரு ஆசனங்களையும் பெற்றன.

பொலநறுவ மாவட்டத்தில் ஐ.ம.சு.மு. ஆறு ஆசனங்களையும் ஐ.தே.க. நான்கு ஆசனத்தையும் பெற்றன.

சப்ரகமுவ மாகாணம்- கேகாலை மாவட்டத்தில் ஐ.ம.சு.மு. பதினொரு ஆசனங்களைப் பெற்றது. ஐ.தே.க. ஏழு ஆசனங்களைப் பெற்றது.

இரத்தினபுரி மாவட்டத்தில் ஐ.ம.சு.மு. 15 ஆசனங்களையும் ஐ.தே.க. 8 ஆசனங்களையும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஒரு ஆசனத்தையும் பெற்றுக் கொண்டன.

கடந்த பொதுத் தேர்தலில் பதுளை மாவட்டத்தில் ஐ.தே.கட்சி மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றுக் கொண்டிருந்த போதும் இம்முறை மாகாணசபைத் தேர்தலில் மாவட்டக்கட்டுப்பாட்டை அது இழந்துள்ளது.

## கண்காணி....

கண்காணிப்புக் குழுத் தலைவரையும், குழுவினரையும் சமாதானச் செயலகப் பணிப்பாளர் நாயகம் புலித்தேவன் வரவேற்று சமாதானச் செயலகத்திற்கு அழைத்துச் சென்றமைகுறிப்பிடத்தக்கது. (சோ)

## மூத்த பெண் படைப்பாளிகள் வானதி வெளியீட்டகத்தால் கௌரவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கப்டன் வானதி வெளியீட்டகத்தின் மூத்த பெண் படைப்பாளிகளைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று கிளிநொச்சியில் இடம் பெற்றது.

கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற இன்நிகழ்வில் தமிழீழத்தின் மூத்த பெண்படைப்பாளிகள் கௌரவிக்கப்பட்டதோடு 2004ஆம் ஆண்டு இலக்கியப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. மாலை 3.00மணியளவில் ஆரம்பமான இந்நிகழ்வின் பொதுச்சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியினை மாலதி படையணிப் போராளி மலைமகள் ஏற்றி வைத்தார். தொடர்ந்து அரங்க நிகழ்வினை ஆரம்பிக்கும் முகமாக கப்டன் வானதியின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை தமிழீழ அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி ஏற்றிவைக்க, நிகழ்விற்கு போராளி தமிழவன் தலைமை தாங்கினார். அரசியல்துறை மகளிர் பொறுப்பாளரின் கருத்துரையினைத் தொடர்ந்து மூத்த பெண் படைப்பாளிகளான தமிழ்க்கவி, ஆதிலட்சுமி, தாமரைச்செல்வி ஆகியோரை மாலதி படையணித் தளபதி கேணல் விதுசா



விருதுகளை வழங்கிக் கௌரவித்தார். தொடர்ந்து வெளிச்சம் சஞ்சிகையின் ஆசிரியர் கருணாகரனின் உரையினைத் தொடர்ந்து 2004ஆம் ஆண்டு இலக்கியப் போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய படைப்பாளிகளுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. பரிசில்களைத் தமிழீழ அரசியல் துறைதுணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், தமிழீழ நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா, கிருஸ்ரினம்மா பொன்.தியாகம், மாலதி படையணிப் போராளி மலைமகள் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர். இதில் 2004ஆம் ஆண்டு கப்டன் வானதி பதிப்பகத்தால் நடாத்தப்பட்ட கவிதை, சிறுகதை, கட்டுரை, ஓவியம் ஆகிய போட்டிகளில் பங்குபற்றி முதல் மூன்று இடங்களையும் பெற்ற படைப்பாளிகள் பரிசில்களைப் பெற்றுக் கொண்டனர். இந்நிகழ்வில தமிழீழத்தின் பல பகுதிகளிலிருந்து வந்த கலை இலக்கியப் படைப்பாளிகள் மற்றும் போராளிகள், இலக்கிய ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (ச)

## நீர்வெறுப்பு நோய்க்கு சிறுமி பரிதாப மரணம்

(புதுக்குடியிருப்பு)

நீர்வெறுப்பு நோய்க்கு உள்ளான சிறுமி ஒருவர் நேற்று மரணமடைந்துள்ளார்.

ரவி குடியிருப்பு புது மாத்தளன் முல்லைத்தீவைச் சேர்ந்த 13 வயதுடைய நீக்கிலஸ் மேரி அனுஷா என்ற சிறுமியே நீர்வெறுப்பு நோய்க்கு உள்ளாகி புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் மரணமடைந்தார்.

விசர்நாய்க்கடிக்கு இலக்கான இச்சிறுமிக்கு விசர்நாய்த்தடுப்பூசி போடாமையே இம் மரணத்திற்குக் காரணம் என வைத்தியசாலை வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன.

இவ்வாறாக நாய்கள் கடிக்கும் பட்சத்தில் சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக வைத்தியசாலையினை நாடவேண்டும் என வைத்தியசாலை வட்டாரங்கள் மேலும்தெரிவித்தன (08)

## காத்திரமான முன்னேற்றமாம்

(கொழும்பு)

நடந்து முடிந்த மாகாணசபைத் தேர்தலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி பெற்றுள்ள பெறுபேறுகள் காத்திரமான முன்னேற்றத்தை எடுத்து நிறுத்துவதாக அக்கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் தனியார் தொலைக்காட்சி ஒன்றிற்குப் பேட்டி அளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.


## குத்தகை கூறல்

மேற்படி கிளிநொச்சியில் இயங்கும் Dr.பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவ மனையில் இயங்கிவரும் சிற்றுண்டிச்சாலை குத்தகைக்கு விடப்படவுள்ளது. இதனை நடத்த விரும்புவோர் கேள்விப்பத்திரத்தை 17.07.2004 ஆம் திகதிக்கு முன் நேரில் வந்து எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனை
கிளிநொச்சி.

(சி-10016)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு யூலை மாதம் 12ஆம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.